பக்கங்கள்: 12+IV=பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 26 புதன்கிழமை (09-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:134

# கண்காணிப்புக் குழு மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு!

## துண்டுப்பிரசுரங்கள் தீக்கிரை

சங்கானை நகரப் பகுதியில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் விநியோகித்த துண்டுப்பிரசுரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

ஈ.பி.டி.பியின் உறுப்பினர்கள் இருவர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்ததாகவும் -

அச்சமயம் அங்கு கூடிய பொது மக்கள் சிலர் அத்துண்டுப் பிரசுரங்களை அங்கு தீவைத்துக் கொளுத்தியதாகவும் - அதைத் தொடர்ந்து துண்டுப்பிரசுரம் விநியோகித்த இருவரும் ஓடி விட்டதாகவும் - கூறப்பட்டது.

## சீன ட்றோலர் தாக்கப்பட்டது பற்றிய இறுதி அறிக்கை பக்கச்சார்பானதாம்

கொழும்பு,ஏப்ரல்9

**கடந்த மாதம் 20 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வடகிழக்கே சீன ட்றோலர் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கை திருப்தியற்றது; பக்கச்சார்பானது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.**

**இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்பியிருக்கிறார்.**

இது விடயத்தில் தமது அதிருப்தியை கடிதம் மூலம் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குத் தெரியப்படுத்தியுள்ள ஜனாதிபதி, இந்தச் சம்பவம் தொடர்பாகக் கடற்படை, நீதிமன்ற விசாரணை ஒன்றை நடத்தி அது பற்றிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் தமக்குச் சமர்ப்பிக்கும்படி கடற்படைத் தளபதிக்கும் எழுத்து மூலம் உத்தரவிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி குமாரதுங்க, கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரிக்வே டெலிவ்சனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், அவர் இறுதி முடிவுக்கு வர முன்னர் இச்சம்பவம் தொடர்பான முக்கிய சாட்சியங்கள் சிலவற்றை கவனத்தில் எடுக்கவில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

இவ்விவகாரம் தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவரின் அறிக்கையில் இருந்து எழுந்துள்ள பின்வரும் விடயங்கள் பகிரங்க அறிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)



திருகோணமலையில் இசை,நடன, நாடக விழா நேற்று ஆரம்பமான போது போராளி ஒருவரின் தாயார் மங்கள விளக்கேற்றும் காட்சி

மானுடத்தின் தமிழ்கூடல்

## திருமலை அரங்க நிகழ்வுகள் கோலாகலமாக ஆரம்பம்

திருகோணமலை,ஏப்.9

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மானுடத்தின் தமிழ்கூடல் II இசை, நடன, நாடக விழா திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.

தமிழீழ தேசியக் கொடியை போர்ப் பயிற்சிப் பொறுப்பாளர் தளபதி கில்மன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினை தொடர்ந்து பொது ஈகச்சுடரினை மேஜர் கஜேந்திரனின் தாயார் ஏற்றினார்.

அரங்கை அதிரவைத்து உணர்ச்சியூட்டி, மெய்சிலிர்க்க வைத்த நிகழ்வாக வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் நெறியாள்கையில் வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகள் 'கூடும் தமிழால் ஓர் அரங்கு' என்னும் வரவேற்பு ஆற்றுகையை நிகழ்த்தினர்.

நெடுந்தீவு மகேசின் கவி வடிவம் உணர்வூட்டியது. 'ஆழ்கடல் ஆர்க்க சுதந்திரம் பூக்க' என்று பாடிச்சென்றனர். எல்லோரையும் கவர்ந்திழுத்தது அந்த வாக்கியம்.

அடுத்த நிகழ்வாக கவிஞர் வ.விக்னேஸ்வரனின் வரவேற்புக் கவி இடம்பெற்றது. சோமேஸ்வரர் குழுவினரின் நாதஸ்வர கச்சேரி மற்றுமொரு நிகழ்வாக இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரைக் குறிவைத்தே வன்னிக்குள் ஊடுருவித் தாக்கும் அணி புகுந்தது!

- அன்ரன் பாலசிங்கத்தின் ஜெனீவா பேச்சு உள்ளே

## போர் அழிவைத்தரும்; போராட்டம் இழந்தவற்றைப் பெற்றுத் தரும்!

### திருமலை விழாவில் இளம்பரிதி சிறப்புரை

திருகோணமலை,ஏப்.9

போர் எல்லாவற்றையும் அழித்து ஒழிக்கும். போராட்டம் என்பது இழந்தவற்றையும் எதிர்பார்ப்பவையையும் பெற்றுத்தரும். எனவேதான் போரை அநியாயமானது என்றும், போராட்டத்தை நியாயமானது என்றும் கூறுகின்றனர். தமிழர்கள் மீது அடக்குமுறையைப் பயன்படுத்தி திணிக்கப்பட்ட போரும், விடுதலைக்காக நாம் மேற்கொள்ளுகின்ற போராட்டமும் இந்த வகையினதே

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி. திருமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்கில் நேற்று கோலாகலமாக ஆரம்பமாகிய இசை, நடன, நாடக விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இளம்பரிதி உரையாற்றினார்.



அவர் தனது உரையில் கூறியதாவது:-

திருமலையில் இராவணன் ஆட்சி செய்ததாகப் புராணம் கூறுகின்றது. குளக்கோட்டன் பணி செய்ததாக கல்வெட்டுக் கூறுகின்றது. மூவின மக்களும் இந்த இடத்தில் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். இனக் குரோதத்துக்கு பின்னரும் கூட மூவின மக்களும் இங்கு ஒன்றுசேர்ந்து வாழ முற்பட்டுள்ளனர். மூவினங்களும் ஒன்று சேர்வதைக் காணும்போது மகிழ்ச்சியாய் இருக்கிறது.

இலங்கையில் சிங்கள மக்கள் அனைத்தையும் பெற்றுத் தனித்துவமாக வாழ்வதைப் போன்று தமிழ், முஸ்லிம் மக்களும் வாழவேண்டும். தத்தமது மனைகளில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு.

இந்த நாட்டில் மூவின மக்களும்

(12ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.நகரின் நடுவே அமைந்துள்ள

## படைத்தளத்தை மாற்றுவது பற்றி ஆராயக் குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.நகரப் பகுதியில் சுபாஸ், ஞானம்ஸ் ஹோட்டல்களில் அமைந்துள்ள இராணுவ முகாமை வேறிடத்துக்கு இடம்மாற்றுவது தொடர்பாக ஆராய உயர்மட்டக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது. யாழ். மாநகரசபை வளாகம், கோட்டை மற்றும் கற்றாடல் பகுதியில் புதிய தளத்தை நிறுவி படையினரை அங்கு இடம்மாற்ற இராணுவத் தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து தளம் அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த விவகாரம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் எம்.பிக்கள் குழுவின் லண்டன் பயணம் ரத்து

வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் பிரிட்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்துச் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசு - புலிகள் பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தவே முஸ்லிம் எம்.பிக்கள் குழு பிரிட்டன் செல்லவிருந்தது.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், இச்சந்திப்புத் தொடர்பாக பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்ட போது, புலிகளின் தலைவர் வேபிரபாகரன், முஸ்லிம் எம்பிக்களைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார் என பாலசிங்கம் கூறினார் என்று வெஸ்பேர்க், முஸ்லிம் எம்பிக்களின் குழுவிடம் அறிவித்திருக்கிறார். இதனையடுத்து லண்டன் பயணம் ரத்துச் செய்யப்பட்டது. அமைச்சர் நூர்தீன் மசூர் நேற்று அத்தகவல்களைத் தெரிவித்தார். (எ)

## திருமலையில் புலிகள் இயக்கப் போராளிகள் உணவு, மருந்து எடுத்துச் செல்லத் தடை!

### கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறைப்பாடு

திருகோணமலை,ஏப்.9

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு போராளிகள் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு படையினர் தடை விதித்து வருகின்றனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுத் தலைவருடன் நேற்றுக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

மூதூரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை இடம்பெற்ற கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட தளபதி கேணல் பதுமன், அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் புலிகளின் சார்பில் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் டிரிக்வே டெலிவ்சனுடன் திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியும் அதில் கலந்துகொண்டார்.

நேற்றுக்காலை ஹெலி மூலம் திருமலை வந்தடைந்த கண்காணிப்புக் குழுத் தலைவர் அங்கிருந்து படகு மூலம் மூதூருக்குச் சென்றார்.

திருகோணமலை ஊடாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கடத்துவதாக அரசு தரப்பில் தெரிவித்துள்ள முறைப்பாடு தொடர்பாக ஆராயவே நேற்றைய கலந்துரையாடல் ஏற்பாடு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடமராட்சி கடற்பரப்பில் தினமும் அந்நிய மீன்பிடி கலங்கள் பிரவேசம்

## உள்ளூர் மீனவர்களின் தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களதும் வேறு ஆசிய நாடுகளைச் சேர்ந்த மீனவர்களினதும் அத்துமீறிய பிரவேசத்தினால் வடமராட்சி மீனவர்களின் மீன்பிடிவலைகள் பெருமளவில் நாசமாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் மீனவர்களும் பெரும் இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீண்டும் மீண்டும் நுழைந்துவரும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் வடமராட்சி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை சேதமாக்குவதுடன் மீனவர்களின் வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுவருவதாக வடமராட்சி மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். வடமராட்சி மீனவர்களை அவர்கள் கத்திகள், பொல்லுகள் என்பவற்றைக் காட்டி அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளில் பயன்படுத்தப்பட்டுவரும் இழுவை மடி வலைகள் மூலம் தமது பிரதேச கடற்பரப்பில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் பெருமளவில் அள்ளி செல்லப்படுவதாகவும் இதனால், எமது கடற்பிரதேசத்தில் உள்ள கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து போகக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாகவும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசத்தைக் கட்டுப்படுத்த இதுவரை எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனவும் வடமராட்சி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்திலும் அண்மைக்காலமாக ஆசிய நாட்டு றோலர்களின் பிரவேசம் அதிகரித்து வருவதாகவும் இதனால் தமிழ மீனவர்களின் மீன்பிடி வலைகள் மாயமாய் மறைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-8)

### துணைவேந்தருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸை பாராட்டி கௌரவிக்கும் விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் இந்த விழா நடைபெறவுள்ளது. (ஜ-9)

### காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.குடாநாட்டின் கரையோர பகுதிகளில் உள்ள காவல்நிலைகளை கடற் படையினர் பலப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக குருநகர், நாவாந்துறை, காக்கைதீவு, பண்ணை ஆகிய கரையோரப் பகுதிகளில் முன்னர் இருந்த காவல் நிலையங்கள் அனைத்தும் மீளப் புனரமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

முட்கம்பிகள், தகரங்கள் என்பவற்றைக் கொண்டு புதிய பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. (ஜ-8)





நேற்று திருகோணமலையில் ஆரம்பமான இசை, நடன, நாடக விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தேசியக் கொடியை தளபதி கில்மன் ஏற்றி வைப்பதையும் போராளிகள் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## காணாமற் போனோர் விவகாரம்

# வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆவணத் தயாரிப்புப் பணி ஆரம்பம்

யாழ்குடாநாட்டில் கடந்த 95 ஆம், 96 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் தொடர்பாக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிகோருவதற்கான ஆவணத் தயாரிப்புப் பணிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின.

இதற்கென கொழும்பில் இருந்து மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி எம்ரெமீடியஸ் தலைமையிலான குழு நேற்று இங்கு வருகை தந்து ஆவணத் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இப்பணி இடம்பெற்றது.

தமது உறவுகள் காணாமற் போனமை தொடர்பான விவரங்களைத் தெரிவிப்பதற்காக காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் 50 பேர் நேற்று அங்கு சமுகமளித்திருந்தனர். இன்றும் நாளையும், இப்பணி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மேற்படி குழுவில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணி எஸ்.சண்முகலிங்கம், மனித உரிமைக்கான சட்ட வல்லுநர் சந்திரபால குமாரகே, சட்டத்தரணி முகம்மட் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (ஜ-10-5)

# மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## உண்ணாவிரதம் இருக்க முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஏப்.9

கடந்த 12 வருடங்களின் பின்பு குடாநாட்டில் மீளக் குடியமர்ந்திருக்கும் - முஸ்லிம் குடும்பங்களுக்கு மீளகுடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்ற 25 ஆயிரம் ரூபா இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்முஸ்லிம் பொது அமைப்புக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக வந்து மீளக்குடியமர்ந்த போதும் 25 ஆயிரம் ரூபா பணமோ எதுவித உதவியுமோ இதுவரை வழங்கப்படவில்லை. முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

இதுவிடயம் தொடர்பாக யாழ். பிரதேச செயலர் முக்கிய கவனம் எடுத்து குறிப்பிட்ட பணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதுபற்றி யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைசசருமான தியாகேஸ்வரனுக்கும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

# துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஏற்பட்ட ரகளை பற்றி ஈ.பி.டி.பி

"ஒரு கணம் நிதானமாகச் சிந்தியுங்கள் புலி உறுப்பினர்களுக்குப் பகிரங்கக்கடிதம் !" என்ற தலைப்பில் புலிகளை விமர்சித்து அவர்களுக்கு எதிராக ஈ.பி.டி.பி வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களைக் கஞ்சாங்கிக் குடியில் விநியோகித்தபோது ஏற்பட்ட ரகளை குறித்து ஈ.பி.டி.பி. அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

பொலீஸாரின் பாதுகாப்பு ஒத்துழைப்புடனேயே துண்டுப்பிரசுரங்கள் கட்சி உறுப்பினர்களால் விநியோகிக்கப்பட்டன. ஆயுத முனையில் மக்களை அச்சுறுத்தி துண்டுப்பிரசுரங்கள் அவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தவர்கள் ஆயுத பாணிகளாக இருந்தனர் என்று கூறுவதில் உண்மையில்லை. சந்தை கூடிய நேரத்தில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை மக்கள் வாங்கிப் படிப்பதை விரும்பாத புலிகளே வாகனத்தில் வந்து அடாவடித்தனத்தில் இறங்கினர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தவர்களைப் புலிகள் தூஷித்தார்கள் என்றும் - இந்தச் சம்பவம் பற்றி மட்டக்களப்பு பொலீஸில் புகார் செய்யப்பட்டிருக்கிறது என்றும் - கண்காணிப்புக் குழுவுக்கு அவசரக் கடிதம் அனுப்பபட்டு இருக்கிறது என்றும் - அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தங்களுடைய பட்டிருப்புக் கோட்ட அலுவலகததுக்கு முன்னால் நின்ற புலி உறுப்பினர்களிடமும் துண்டுப் பிரசுரங்கள் நீட்டப்பட்டன என்றும், அவற்றைப் புலிகள் வாங்க மறுத்ததை அடுத்தே முறுகல் ஏற்பட்டது என்றும் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அது பற்றி ஈ.பி.டி.பியின் அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# யாழ்.வங்கிகள் வழங்கும் புத்தாண்டு வெகுமதிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

எதிர்வரும் சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு குடாநாட்டிலுள்ள வங்கிகள் விசேட திட்டங்களையும் கொடுப்பனவுகளையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளன.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் செலான வங்கி ஆகியனவே புத்தாண்டை ஒட்டிய தமது விசேட நடவடிக்கைகளை அறிவித்துள்ளன.

இலங்கை வங்கியில், புத்தாண்டு தினத்தன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரை பணிகள் இடம்பெறும். அதேசமயம் புத்தாண்டுக்கு முந்திய தினமான ஞாயிற்றுக்கிழமையும் இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளை, சுன்னாகம் கிளை மற்றும் பருத்தித்துறைக்கிளை ஆகியன இயங்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. புத்தாண்டு தினத்தன்று ரூபா 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட வைப்புத் தொகைகளுக்கு 8 முதல் 8.5 சதவீதம் வரையிலான அதிகரித்த வட்டியை வழங்கும் திட்டமொன்றை இவ்வங்கி அறிமுகப்படுத்துகிறது.

மேலும் இலங்கை வங்கியில் என்.ஆர்.எவ்.சி. கணக்கு வைப்பாளர்களின் குடும்பத்தவர்களுக்கு இலவச டயலொக் தொலைபேசி அட்டைகள் வழங்கப்படவுள்ளன. வைப்பாளர்கள் தமது கணக்கு இலக்கம், வங்கிக் கிளை, பெயர், முகவரி போன்ற விவரங்களுடன் நாளை வியாழக்கிழமைக்கு முன்பதாக தொடர்பு கொள்ள வேண்டும். இலங்கை வங்கித் தலைமை அலுவலகத்துக்கு அல்லது, கொழும்பு தலைமையகத்தில் உள்ள சரத் பண்டார ஆகிய அலுவலர்களில் ஒருவருடன் 447831 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பை ஏற்படுத்த முடியும்.

இதேவேளை -

'ரன்கிலும் வாசனா' என்ற பொற்கணக்குச் சீட்டிழுப்பில் வென்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மக்கள் வங்கியில் புத்தாண்டு தினத்தன்றும் வழமைபோன்று முழுநேரமும் பணிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் ரூபா 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையை வைப்பீடாக இடுவோருக்கு சேமிப்புச் சான்றிதழுடன், மக்கள் வங்கிச் சின்னம் பொறிக்கப்பட்ட அழகிய பெறுமதி மிக்க விளக்கு ஒன்றும் பரிசாக வழங்கப்படும். ஆறு மாத காலத்தில் முதிர்ச்சியடையும் இச்சான்றிதழுக்கு 'ஜனஜய' சேமிப்புக் கணக்குக்கு வழங்கப்படும் வட்டி வீதம் வழங்கப்படுவதுடன் 'ஜயஸ்ரீ' எனப்படுகின்ற மாபெரும் பரிசுத் திட்டத்திலும் அது இணைக்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கியில் புத்தாண்டு தினத்தன்று பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 5 மணிவரை பணிகள் இடம்பெறும். அன்றைய தினம், ரூபா 5 ஆயிரம் அல்லது அதற்குக் கூடிய தொகையை வைப்பிலிட்டு 50 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை பெறுமதியுள்ள 'ரிதிரேகா' சான்றிதழ்களை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் 50 லட்சம் ரூபா பெறுமதியான புதிய வீட்டை வென்றெடுக்கும் அதிர்ஷ்ட வாய்ப்பும் கிட்டலாம். மேலும் அன்றைய தினம் சேமிப்பு உண்டியலும் விநியோகிக்கப்படும்.

செலான் வங்கியில் புத்தாண்டு தினத்தன்று பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை பணிகள் இடம்பெறும். அன்றைய தினம் சாதாரண சேமிப்புக் கணக்கில் ரூபா 5 ஆயிரம் அல்லது அதற்கு மேல் வைப்புச் செய்யும் அனைவருக்கும் 500 ரூபா பெறுமதியான டிக்கிரி அன்பளிப்பு வவுச்சர் வழங்கப்படும் சேமிப்புத் தொகையை ரூபா 20 ஆயிரமாக அதிகரித்து ஆறு மாத காலத்துக்குப் பேணி வந்தால் அக் குடும்பத்திலுள்ள அனைவரும் சீட்டிழுப்பு எதுவுமின்றி - எக்காலத்திலும் வெகுமதிகளை வெல்லக் கூடிய - மெரிட் ரிவோட்ஸ்' திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இவற்றுடன் மேற்படி சகல வங்கிகளிலும், வழமைபோன்று புத்தாண்டுக் கைவிசேடம் வழங்கப்படுமென அவ்வங்கிகளின் முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ-9)

### மரண விசாரணை நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.9

ஏழாலை தெற்கு, விழிசிட்டிப் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றின் மலக்குழியில் இருந்து ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான மரண விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் இடம்பெற்ற மரண விசாரணையில் மல்லாகம் ஈ.பி.டி.பி. முகாமில் இறந்தவருடன் ஒன்றாக தங்கியிருந்த வைரமுத்து சுதர்சன் என்பவர் சாட்சியம் அளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

மல்லாகத்தில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமில் நானும் இறந்தவரும் மட்டுமே தங்கிருந்தோம். கடந்த 4ஆம் திகதி இறந்தவர் மருந்து எடுப்பதற்காக தெல்லிப்பழைக்குச் சென்றார். பின்னர் காணாமற்போனார். அவர் காணமற் போனமை குறித்து சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்தேன்.

ஏழாலையில் வீட்டு மலக்குழி ஒன்றில் அவரின் சடலம் கிடப்பதாக தகவல் கிடைத்து அங்கு சென்று சடலத்தை அடையாளம் காட்டினேன் - என்றார்.

ஏழாலைப்பகுதியில் கிராம சேவையாளர் உட்படப் பலர் சாட்சியம் அளித்தனர்.

மேல் விசாரணை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஜ-3)

## யாழ்.மாவட்டத்துக்கென

# வாகனப் பரிசோதகர் இம்மாதம்முதல் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் யாழ்மாவட்டத்துக்கென நிரந்தர வாகனப் பரிசோதகர் ஒருவர் இம்மாதம்முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இது வரை காலமும் யாழ்மாவட்டத்துக்கான தற்காலிக வாகனப் பரிசோதகராகக் கடமையாற்றி வந்த ஆர். ஏரிகுலஸ் என்பவரே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாதத்தில் முதல் மூன்று வாரங்கள் யாழ்ப்பாணத்திலும், மாதத்தின் இறுதி வாரத்தில் மன்னாரிலும் தமது பணியை மேற்கொள்வார்.

நிரந்தர வாகனப் பரிசோதகர் ஒருவர் இல்லாமையால் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணிகள் கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் நடைபெறவில்லை என்பதும் -

1997 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பணிகள் மீண்டும் இடையிடையே இடம்பெற்று வந்தமையும் தெரிந்ததே.

இதற்கிடையில் இனிவரும் காலங்களில் 'லைசென்ஸ்' வழங்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள யாழ்உதவி ஆணையாளர் விபத்மநாதன் தெரிவித்துள்ளார். (எ-10)

# நேற்று அதிகாலை நடந்த தாக்குதலில் சதாமும் 2 மகன்களும் உயிரிழந்தனரா?

## தகவலை உறுதிப்படுத்த அமெ. அதிகாரிகள் மறுப்பு

பக்தாத்,ஏப்ரல்9

**நேற்று அதிகாலை அமெரிக்கப் போர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனும் அவரது இருமகன்களும் கொல்லப் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. ஆயினும், அமெரிக்க அதி காரிகள், சதாம் இறந்ததாக உறுதியாகக் கூற மறுத்துவிட்டனர்.**

சதாம் ஹுசைன் தன் 2 மகன் களுடன் பக்தாத்தில் இருந்து தனது சொந்த ஊரான திக்ரித்துக்கு தப்பிச் சென்றுவிட்டதாக நேற்றுமுன்தினம் தகவல் வெளியானது. ஆனால், அமெ ரிக்க உளவுத்துறையினர் இதனை நம்பவில்லை.

சதாமும் அவரது நம்பிக்கைக் குரிய தளபதிகளும், பக்தாத் பதுங்கு குழிகளில் எங்காவது தஞ்சம் அடைந திருக்கலாம் என்று சந்தேகப்பட்டனர். நேற்று அதிகாலை இது உறுதியா னது.

சதாமின் நடமாட்டம் குறித்து ரக சியமாகத் தகவல் தருவதற்காக பல ஈராக்கியர்களை கோடிக்கணக்கில் பணம் கொடுத்து அமெரிக்க உளவுத் துறை பணியில் ஈடுபடுத்தியுள்ளது. அத்தகைய உளவாளி ஒருவரிடம் இருந்து நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்க உளவுத்துறைக்கு ஒரு தகவல் வந்தது.

சதாம், தனது 2 மகன்கள் மற்றும் தளபதிகளுடன் பக்தாத்தில் மன்சூர் எனும் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஒரு பங்களாவுக்குள் ரகசிய ஆலோ சனையில் ஈடுபட்டிருப்பதாக அந்த உளவாளி தெரிவித்தார். ஈராக் உளவுப் படை அதிகாரிகளும் அந்த பங்களா வில் இருப்பதாகத் தெரியவந்தது.

இதற்கிடையே அந்த பங்களாவுக் குள் ஏற்கனவே அமெரிக்க உளவுத் துறையினர் பதித்திருந்த கருவி மூல மாக சதாம் அங்கு இருப்பது உறுதிப் படுத்தப்பட்டது. சதாம், தன் மகன்களு டன் நடத்திய உரையாடலை, அந்தக் கருவி மூலம் அமெரிக்க உளவுப்படை யினர் இடைமறித்துக் கேட்டனர்.

இதையடுத்து, அந்தக் கட்டடத் துக்குள் சதாம் இருப்பது உறுதியா னது. உடனடியாக இந்தத் தகவல் கட்டாரில் அமைக்கப்பட்டுள்ள போர்த் தலைமையகத்துக்கு தெரிவிக்கப்பட் டது.

இதைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. இலக்குகளை மிகத் துல்லி யமாகக் கணித்துத் தாக்கும் சக்தி கொண்ட பி.1பி. வகை விமானம் பக்தாத் நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

இலங்கை நேரப்படி நேற்று அதி காலை 5.00 மணிக்கு அந்த விமா னம் மன்சூர் குடியிருப்பு மீது வட்ட மடித்து, சதாம் இருப்பதாக கருதப் பட்ட கட்டடத்தைக் கண்டுபிடித்தது. அந்தக் கட்டடம் மீது அடுத்தடுத்து 4 சக்தி வாய்ந்த குண்டுகள் வீசப்பட்டன.

'ஜே.டி.ஏ.எம்.' (ஜொயின்ட் டைரக்ட் அற்றாக் அம்னிசன்ஸ்) வகையைச் சேர்ந்த அந்த குண்டுகள் ஒவ்வொன் றும் தலா 900 கிலோ எடை கொண் டவை. லேசர் வழிகாட்டுதலுடன் இலக்குகளை இம்மியளவு கூட பிசகா மல் இவை தாக்கும். இந்த குண்டுகள் ஒவ்வொன்றும் 92 லட்சம் ரூபாய் மதிப்புக் கொண்டவை. இத்தகைய சக்தி உள்ள 4 குண்டுகள் ஒன்றன் பின் ஒன்றாக ஒரே கட்டடம் மீது விழுந ததில், அந்தக் கட்டடம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோனது.

பதுங்குகுழிகளை அழிக்கும் குண்டுகளும் வீசப்பட்டன. இதனால், அந்தக் கட்டடம் இருந்த இடத்தில் மிகப் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. அருகில் இருந்த ஒரு ஹோட்டல், அடுக்குமாடிக் குடியிருப்பு ஆகியவை யும் சேதமடைந்தன.

சதாம் இருந்ததாக கூறப்பட்ட இடம் சுடுகாடுபோலக் காட்சியளித் தது. அந்தக் கட்டடத்தின் கீழே பதுங்குகுழிகள் இருக்கலாம் என்ற எண்ணத்தில், அதற்கேற்ப குண்டுகள் வீசப்பட்டதால் அங்கு 60 அடி ஆழத துக்கு பள்ளம் விழுந்துள்ளது.

இந்த அதிரடித் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டதாக அமெரிக்கப் போர்த்தலைமையக செய்தித் தொடர் பாளர் பிரட்பார்ட் லைட் தெரிவித்தார். சதாம் கொல்லப்பட்டாரா என்ற கேள விக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட் டார்.

ஆனால், வாஷிங்ரனில் உள்ள பென்ரகன் அதிகாரிகள் கூறுகையில், 'சதாம், தன் 2 மகன்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடதது வதாக தகவல் கிடைத்ததும், அந்தக் கட்டடத்தை தரைமட்டமாக்கி விட் டோம். எனவே அவர்கள் கொல்லப் பட்டிருக்கலாம்' என்றார்கள்.

'ஸ்கை நியூஸ்' தொலைககாட்சிக் குப் பேட்டி அளித்த பென்ரகன் அதி காரி ஒருவர், 'சதாம் ஹுசைனும், அவரது 2 மகன்களும் மன்சூரில் உள்ள கட்டடத்தில் தங்கி பேசிவருவ தாக எங்களுக்கு 3 முனைகளில் இருந்து நம்பகத்தன்மையான ரகசியத் தகவல் வந்தது. எனவேதான் கொஞ சம் கூட யோசிக்காமல் அதிரடியாக குண்டுகளை வீசி அந்தக் கட்டடத்தை அழித்துவிட்டோம். அதில் சதாம் இறந்திருக்கலாம்' என்றார்.

ஆனால், அமெரிக்க உளவுத்துறை யினர் சதாம் கொல்லப்பட்டாரா என் பதை உறுதி செய்யவில்லை. இதற் கிடையே குண்டு வீசப்பட்ட இடத்தில் சிறப்புப் படையினர் மூலம் சேதவிவ ரங்கள் கணக்கிடப்பட்டு வருகின்றன. அங்கு இடிபாடுகளை அகற்றும் பணி வேகமாக நடந்துவருகிறது. நேற்று மதியம் கிடைத்த தகவல்படி 2 பேரின் சிதைந்த உடல்கள் மீட்கப் பட்டன. சேதவிவரங்கள் முழுமையா கத் தெரிந்தால்தான், சதாம் கொல் லப்பட்டாரா என்பது நூறு சதவீதம் உறுதியாகும். (ஒ)




ஈராக்கின் வடக்குப் பகுதியில் அமெரிக்கப் படையினர் வசமுள்ள இடத்தில் இருந்த சதாம் ஹுசைனின் படத்தை குர்திஷ் ஆயுதக் குழுவினர் அகற்றுவதைப் படத்தில் காணலாம்.

## நேற்றைய நிலைவரம்

★ அமெரிக்கா கைப்பற்றியதாகக் கூறிய அதிபர் சதாமின் மாளிகை வளாகத்தில் நேற்றும் சமர் நடந்தது.

★ அல் ஜெஸீரா தொலைக்காட்சிச் சேவையின் பக்தாத் அலுவலகம் அமெரிக்கப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியதில் ஒருவர் உயிரி ழந்தார்.

★ ஈராக் அரச தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகள் செயற் படவில்லை.

★ அமெரிக்கத் தாக்குதல் விமானம் ஒன்று பக்தாத் விமான நிலையம் அருகே விழுந்து நொறுங்கியது. விமானி 'பரசூட்' மூலம் குதித்துத் தப்பி னார்.

## அமெ. டாங்கித் தாக்குதலில் செய்தியாளர்கள் காயம்!

பக்தாத்,ஏப்.9

போர்ச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற வெளிநாட்டுச் செய்தியாளர் கள் அமெரிக்க டாங்கித் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர்.

பக்தாத்தில் உள்ள உயர்தர தங்கும் விடுதியான பலஸ்தீன ஹோட் டல் மீது நடத்தப்பட்ட தாக்குதலி லேயே இவர்கள் காயமடைந்தனர்.

அமெரிக்க டாங்கி ஏவிய பீரங் கிக் குண்டுகள் ஹோட்டலைத் தாக் கியதாக நேரில் கண்டவர்கள் தெரி வித்தனர்.

ஹோட்டல் வளாகத்திலிருந்து சிறியரக ஆயுதங்கள் மற்றும் றொக் கெட் ஆகியவற்றைப் பயன்படுத்தி கூட்டுப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

அமெரிக்க டாங்கிகள் அதற்குப் பதிலடி நடத்தியதாகவும் - கூட்டுப் படைகளின் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

இத்தாக்குதலில் தமது குழுவை சேர்ந்த 4 பேர் காயமடைந்ததா 'றொய்டர்' செய்திச் சேவை நிறுவ னம் தெரிவித்துள்ளது. (ஒ)




தமிழகத்தில் சென்னை ராணிமேரி கல்லூரியை இடித்துவிட்டு அங்கு தலைமைச்செயலகத்தைக் கட்டும் தமிழக அரசின் முடிவை எதிர்த்து அக் கல்லூரி மாணவிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

மாணவிகளின் இப்போராட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவி ஒலிவ் போல் என்பவர் கலந்துகொண்டு கோஷமெழுப்புவதைப் படத்தில் காணலாம்.

1921-24ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மேற்படி கல்லூரியில் சமூகவியல் துறையில் கற்ற இவருக்கு வயது இப்போது 102.

## பக்தாத்தின் புறநகர்ப் பகுதியில் ரஷ்ய ராஜதந்திரிகள் மீது தாக்கு!

பக்தாத்,ஏப்.9

ஈராக்கியத் தலைநகர் பக்தாத் தில் தீவிர போர் மூண்டுள்ள நிலை யில் நகரை விட்டு வெளியேறி ரஷ்ய ராஜதந்திரிகள் தாக்குதலுக்கு இலக் காகினர். இந்த ராஜதந்திரிகள் பய ணித்த வாகனம் கூட்டுப் படையின ருக்கும் ஈராக்கிய வீரர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலின் நடு வில சிக்கியதாலேயே, இந்த அனர்த் தம் இடம்பெற்றதாக ராஜதந்திரிக ளுடன் பயணித்த ரஷ்ய ஊடகவிய லாளர் அலெக்ஸாண்டர் மினாகோவ் தெரிவித்தார்.


பக்தாத்தின் புறநகர்ப் பகுதியி லேயே இந்தச் சம்பவம் இடம்பெற்ற தாக அவர் மேலும் தெரிவித்தார். ஈராக் - ஜோர்டான் எல்லைப் பகு தியை வந்தடைந்த அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"ஈராக்கிய நிலையொன்றை கடந்து கொண்டிருந்தோம். அப்போது பலத்த தாக்குதலுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டோம். ஈராக்கியர்கள் மீது அமெரிக்கப் படையினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினார்கள். ஈராக்கி யர்களும் திருப்பிச் சுட்டனர். இதில் எம்மில் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன. அப்போது சுமார் 70 மீற்றர்கள் தொலைவிலையே அமெரிக்கப்படை யினர் இருந்தனர்.

நாங்கள் எமது வாகனங்களை விட்டு கீழிறங்கி வெள்ளைத் துணி களை அசைத்தோம். அத்துடன் மருத்துவ உதவிகேட்டு குரல் எழுப்பி னோம். ஆனால், இருதரப்பினரும் மோதலை கைவிடவில்லை. வாகனங் களில் சுமார் 25 பேர் இருந்தோம். அதில் நான் உட்பட சில ஊடகவிய லாளர்களும் அடங்கியிருந்தனர் - என் றார் அவர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஒருவரின் உடலிலிருந்து எம் - 16 தன்னியக்கத் துப்பாக்கியின் இரு தோட்டாக்கள் எடுக்கப்பட்டதாகவும் - இந்த ரகத் துப்பாக்கிகளை அமெ ரிக்க 'மரைன்' படையினரே பயன் படுத்துவதாகவும் - ஊடகச் செய்தி கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தையடுத்து, ரஷ்ய அதி பர் விளாடிமிர் புடினை அமெரிக்க அதிபர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அத்துடன், அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலிசா ரைஸ், மொஸ்கோ விரைந்துள்ளார். (ஒ)





## ஒவ்வொரு தடவையும் வாழ்க்கையின் மிகச் சிறந்த சவாரி

- ஐப்பான் கவாசாகி கம்பனியினால் வடிவமைக்கப்பட்டது.
- 111.6 CC உயர்சக்திவாய்ந்த 7.7 குதிரை வலு கொண்ட 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- சாதாரண சவாரிச் சூழ்நிலைகளில் லீட்டருக்கு 60 கி. மீ. உயர்வான பயன்.
- ஒவ்வொரு பயணத்தூரத்தையும் அளக்கும் ட்ரிப் மீட்டர்.
- கைபிடியை பூட்டுவதற்கும், ஸ்டார்ட் செய்வதற்கும் ஒரே பூட்டு.
- உயர்வான நம்பிக்கைக்கு இரட்டைஎண்ணெய் வடிகட்டும் முறைமை.
- கவர்ச்சிகரமான வேகக்காட்டி, மின்சார டக்கோ மீட்டர், எரிபொருள் காட்டி போன்ற கருவித்தொகுதிகளுடன்.

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் : குறிஞ்சி ட்ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0777-626919
குறிஞ்சி ட்ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 0777-626919

உதயன்

# அம்மாமார் இருவரும் ஒப்புக்குச் சப்பாணி!

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகத்துக்கு திரும்ப அழைத்து, அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

ஜெயலலிதா - சந்திரிகா சந்திப்புக் குறித்து தமிழக அரசு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் செய்தியை வாசித்ததும் தமிழகத்தில் அகதி முகாம்கள், நலன்புரி நிலையங்கள் என்ற பெயர்களில் உள்ள இடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழ் அகதிகளுக்கும் அவர்கள் சம்பந்தமான புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள், தன்னார்வத் தொண்டர்களுக்கும் மற்றும் விடயமறிந்த ஏனையோருக்கும் அழுவதா அல்லது சிரிப்பதா என்ற நிலை தோன்றியிருக்கும் என்பது நிச்சயம்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம். அங்கு வெடித்த கொடூரப்போரின் பேரழிவுகளுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாமல் - முகங்கொடுக்கமுடியாமல் - உயிரையாவது காப்பாற்றுவோம் என்ற நப்பாசையில் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அருகிலிருந்த தமிழகத்துக்கு ஓடித்தப்பித் தஞ்சம் புகுந்தார்கள்.

'சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதை' போன்று - அங்கு அனலில் வீழ்ந்த புழுவாய்த் துடிக்கின்றார்கள் அவர்கள் என்பதுதான் வேதனை.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழ் அகதிகள் ஒவ்வொருவருமே அங்கு தமிழக மற்றும் மத்திய அரசுகளால் புலிப் போராளிகள் என்ற சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றார்கள். இதன் விளைவாக அவர்கள் தங்கியுள்ள அகதிமுகாம்கள், நலன்புரி நிலையங்கள் என்பன தடுப்புமுகாம்கள் ஆகிவிட்டன. அவர்களுக்கு எதிரான கெடுபிடிகள் எழுத்தில் வடிக்கமுடியாதவை; சொல்லிமாளாதவை.

இந்த சிறைக்கொடுமைகளிலிருந்து தப்பிவர முயலும் அகதிகளின் நிலைமையும்கூட பரிதாபமே.

கைகளில் எஞ்சியிருக்கும் தங்கள் உடைமையான ஓரிரு நகைகளை விற்றுக் கட்டி, அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி, தமிழக மீனவர்களின் அரைகுறை உதவியோடு, உயிரைப் பிடித்துக்கொண்டு பயணித்து, பல ஆபத்துக்களைக் கடந்து ஈழத்துக்குத் தப்பிவந்து சேரும் ஒருசில அகதிகள் தமிழக அகதிமுகாம்களின் - தடுப்பு நிலையங்களின் - நிலைமை குறித்துக் கூறும் கதைகள், தகவல்கள் கண்ணீரை வரவழைப்பவை.

மேற்குலகுக்குப் புகலிடம் தேடிச்சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோரும் அகதிகளில் கணிசமானோர் பொருளாதார அகதிகள்.

ஆனால், வடக்கு - கிழக்கிலிருந்து தமிழகத்துக்கு ஓடித்தப்பிய ஈழத்தமிழ் அகதிகள் அங்கு பிழைப்புக்குச் சென்றவர்கள் அல்லர். உயிர்பிழைப்பதற்காகச் சென்றவர்கள். இன்று வடக்கு, கிழக்கில் யுத்த இருள் இல்லை. எனினும், பொருளாதார மீட்சி ஏற்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது. ஆனால், தமிழகத் தடுப்புமுகாம்களிலுள்ள அவல நிலையை விட மோசமான சூழ்நிலை வடக்கு - கிழக்கில் இல்லை என்பது மட்டும் உறுதி.

எனவே, உயிர்பிழைக்கச் சென்றவர்கள் தமது தாயகத்தில் அமைதி நிலை நிலவும்போது தஞ்சம் புகுந்த இடத்தில் தடுப்புமுகாம்களில் கிடந்து அவலப்படத்தேவையில்லை. அவர்கள் விரைந்து தாயகம் திரும்புவதே சரி. அதையே அவர்களும் விரும்புகின்றார்கள்.

அதற்கான வழிவகைகளை முன்னெடுப்பதற்கு, வடக்கு - கிழக்கில் அப்பணிகளுக்குப் பொறுப்பான 'சிரான்' உபகுழு போன்ற அமைப்புகள் முனைப்புடன் முன்நிற்கின்றன.

ஆனால், இந்திய அரசோ, இந்தியத் தூதரகமோ இதுவிடயத்தில் அந்த உப குழுவுடன் இணைந்து செயற்பட மறுக்கின்றன. தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போக்கும், நோக்கும் கூட அத்தகையதே.

மறுபுறத்தில், இலங்கை அரசின் தற்போதைய சமாதான முயற்சிகளை வாயளவில் வரவேற்கும் இலங்கை ஜனாதிபதி செயலளவில் அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றார். தற்போதைய சமாதான முயற்சிகளின் போக்கில் வெளிப்பட்ட 'சிரான்' உபகுழுவையோ சமாதான முயற்சிகளின் தற்போதைய பெறுபேறுகளையோ அவர் அங்கீகரிக்கவும் இல்லை; வரவேற்கவும் இல்லை.

இத்தகைய இருவர் - தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவும் - ஈழத் தமிழ் அகதிகளை திரும்ப அழைப்பது குறித்துப் பேசுவது அல்லது பேசுவதுபோலக் காட்டுவது, ஒப்புக்குச் சப்பாணி போடுவது போன்றதுதான். அது பயன்தரும் விடயம் என எதிர்பார்ப்பது அறியாமைதான்.

# மானுடத்தின் தமிழ் கூடல் II இரண்டாம் நாள் நிகழ்வுகள்

திருகோணமலை,ஏப்.9

திருகோணமலையில் நடைபெறும் 'மானுடத்தின் தமிழ் கூடல் II இசை, நடன, நாடக விழாவில் இன்று புதன்கிழமை இடம்பெறும் நிகழ்வுகள் வருமாறு:-

ஜனாப் ஏ.எச்.சாகுல் ஹமீட் மங்கள விளக்கேற்றுவார். விழாச்சுடரினை தா.பி.சுப்பிரமணியம், திருமதி கா.மணிமேகலை வி.குணபால், ஏ.சோதிலிங்கம் ஆகியோர் ஏற்றி வைப்பார்கள். தில்லை முகிலன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து உ.இராதாகிருஷ்ணனின் வயலினிசை இடம் பெறும். தலைமையுரையை திருமதி ந.ஸ்ரீதேவியும் கருத்துரையை பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸும் சிறப்புரையை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் நிகழ்த்துவார்கள்.

இசைக் கலைமணி திருமதி பிரியதர்ஷினி ஜெகதீஸ்வரனின் பாட்டுக்கச்சேரியும் திருமறைக் கலாமன்ற திருமலைக கலைஞர்கள் வழங்கும் 'கூடித்துயர்வெல்', தர்மஸ்ரீ பண்டார நாயக்காவின் 'றோஜனத்துப் பெண்கள்' ஆகிய நாடகங்களும் இடம்பெறும். (ஓ)

## திருவீதி மான்மியம்

### சாலையில் நடக்க சாதகம் வேண்டும்

காலையில் கண்டி றோட்டில்
கந்தையர் படுகாயமுற்றார்
மாலையில் மானிப்பாய் சென்ற
மயிலரும் லொறிமோதி மாண்டார்
வேலைக்குச் சென்ற விதானையாரும்
விபத்தினில் சிக்கி மாண்டார்
நாலைந்துபேரை மோதியதை
நடுத்தெரு தீயில் இட்டார்
சாலையில் நடந்துசெல்ல
சாதகம் பார்க்க வேண்டும்
நிலையிது நாட்டில் என்றால்
நிம்மதி கிடைப்பது எப்போ?

- விகடகவி.

# தமிழரே தமிழரை விழுங்கும் நிலை மாறினாலே எம் துயரங்கள் தீரும்!

## காணாமற்போனோர் அமைப்பின் செயலாளர் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.9

தமிழரே தமிழரை விழுங்கும் நிலை மாறவேண்டும். பிறருக்காகவும் நாம் வாழும்நிலை உருவாகும்போதுதான் எம் எல்லோரதும் துன்பங்கள் தீரும்.

வடமாகாணத்தில் காணாமற்போனவர்களின் பெற்றோர், குடும்ப அங்கத்தினர்களுக்கான அமைப்பின் செயலாளர் சி. மோகன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சமீபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழர்கள் மத்தியில் உள்ள பல பெரிய மனிதர்கள் சுயநலவாதிகளாக உள்ளனர். இந்தநிலை மாறவேண்டும்.

தமிழரே தமிழரை விழுங்கி வாழும் சுயநல வாழ்வை விடுத்து மற்றவர்களுடைய கஷ்டங்களையும் உணர்ந்து பிறருககாகவும் சிந்தித்து மற்றோருக்கு உதவிடப் பழகுதல் வேண்டும். அப்போதுதான் எம் எல்லோரது கஷ்டங்களும் தீரும்.

கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக இத்தனை வருடங்களாகியும் உண்மை நிலையினை அறிய முடியாதுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் அதிகாரிகள் பலரும் இது தொடர்பில் கரிசனையுடன் செயலாற்றுவதாகத் தெரியவில்லை.

தென்பகுதியில் உள்ள பிற இனத்தவர் எமக்குக் காட்டும் ஆதரவைக்கூட தமிழ் அதிகாரிகளிடமிருந்து நம்மால் எதிர்பார்க்க முடியாதுள்ளது. இங்குள்ள உயர் அரச அதிகாரியிடம் இதுகுறித்துப் பேசப்போனால் தமக்கும் இதற்கும் தொடர்பில்லாதது போல் அவர் ஒதுங்கி விடுகின்றார். நாம் பல சந்தர்ப்பங்களில் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளோம்.

அரசு நிர்வாக மட்டத்தில் ஊழல்கள் இடம்பெறுகின்றன. இதற்கு உயர் அதிகாரிகள் பலரும் உடந்தையாகத்தான் உள்ளார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது. அரசு உயர் அதிகாரிகள் பலரும் தமது மகள்களுக்கு அளவுக்கதிகமாகச் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு சீதனம் வழங்க பணம் எங்கிருந்து வந்தது? எமது மக்களின் வயிற்றில் அடித்துச் சுரண்டிய பணமே இவ்வாறு செலவு செய்யப்படுவதாகத் தோன்றுகின்றது.

இவ்வாறு எமது பணத்தினை ஏப்பம் விடக்கூடியவர்கள் எம்மத்தியில் இருக்கின்றபோது நாம் எவ்வாறு எமது துன்பங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

இங்குள்ள பல கடைகளில் குழந்தைத் தொழிலாளர்களைக் காண முடிகின்றது. இவர்கள் மீது கருணை கொண்டு உதவி செய்யவேண்டிய பெரியவர்களே, அவர்களை வேலைக்கமர்த்தி பல்வேறு துன்பங்களையும் விளைவிக்கிறார்கள். இது மட்டுமன்றி சிறுவர்களை மேலும் பல இன்னல்களுக்கு ஆளாக்கியும் வருகின்றனர்.

சிறுவர் நலன் பற்றிப் பேசுபவர்கள் என்ன செய்கிறார்கள்? எமது இளைய சந்ததியின் எதிர்காலந்தான் என்ன? சுயநலமிகள் வருமானத்திற்காக எதனையும் செய்யும் நிலையில் உள்ளார்கள். இந்தநிலை மாறவேண்டும்.

அனைவரும் தமிழர் என்னும் அடிப்படையில் பிறரது கஷ்டங்களை உணர்ந்து மற்றவர்களுக்காகவும் வாழப்பழக வேண்டும் - என்றார் அவர். (ஓ-12)

# மகிழ்ச்சியே மனித வாழ்வின் இலட்சியம்: சைவ சமயம் இதற்கு வழிகாட்டும்!

## கல்கி' பகவானின் சீடர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஏப்.9

மகிழ்ச்சியை இலட்சியமாகக் கொண்டதே மனித வாழ்வு. அந்த இலட்சியத்தை அடைவதற்கு சைவசமயம் பெருதவி புரிகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீ கல்கி பகவானின் சீடரான ஸ்ரீ ராஜேஷ் பகவத்தாஸா. யாழ்.மக்கள் நலன் கருதி ஸ்ரீகல்கி பகவானின் ஸ்வர்ணயுக அமைப்பு ஏற்பாடு செய்த 'ஐஸ்வர்ய ஹோமம்' கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்.பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் மண்டபத்தில் நடைபெற்றது. பகவானின் சீடர்களான ஸ்ரீ ராஜேஸ் பகவத்தாஸா, ஸ்ரீ சுஜய் பகவத்தாஸா ஆகியோர் இணைந்து ஹோமத்தை நடத்தினர்.

ஸ்ரீ ராஜேஷ் பகவத்தாஸா தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:- உலக நாடுகளில் உள்ளவர்கள் பலர் இன்று சைவசமயத்தைப் பற்றி பல்வேறு விமர்சனங்களைச் செய்கின்றனர். கல், மண், புல், பூண்டு, பாம்பு, தேள் என்று அனைத்தையும் வழிபடுவதாகவும் இவர்கள் ஏளனம் செய்கின்றனர். ஆனால், இத்தகைய நிகழ்வுதான் மனிதனின் உயர்ந்த அறிவாகும். இதனை எமக்கு இந்துசமயம் கற்றுத் தந்துள்ளது. ஆனால், இன்று நாம் இவற்றை மறந்து பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாகியுள்ளோம்.

எந்த ஒரு செயலிலும் ஈடுபடும்போதும் நாம் மனச் சந்தோசத்துடனும் மனப்பூர்வமாகவும் ஈடுபட வேண்டும். எமது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் சந்தோசத்தை இலக்காகக் கொண்டவையாகும். ஆகவே, எமது செயலில் மனமும் கருத்தும் ஒருமிக்கும்போது சந்தோசத்தை அடைய - அனுபவிக்க முடியும்.

உங்களைச் சுற்றி இருப்பவர்களுடன் எத்தகைய உறவுகளைக் கொண்டுள்ளீர்களோ அந்தளவுக்குத்தான் உங்களுடைய உறவும், சந்தோசமும் அமையும்.

இந்த ஐஸ்வர்ய ஹோமம் எமக்கும் சுற்ற உள்ளவர்களுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தவும் - எமக்கும் இயற்கைக்கும் இடையில் உறவைப் பலப்படுத்தவும் -

எமக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறவைப் பலப்படுத்தவும் - உதவும்.

இன்று மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையில் போட்டி இடம்பெறுகின்றது. மனிதன் தன்னை காத்துக்கொள்ள இயற்கையை அழிக்கின்றான். இயற்கை தன்னைக் காத்துக்கொள்ள மனிதனை அழிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனிதன் நாளாந்தம் பல்வேறு வழிகளாலும் இயற்கையை நாளுக்கு நாள் அழித்துக்கொண்டே இருக்கின்றான்.

முன்னோர்கள் மரத்தை வெட்டுவதாக இருந்தால் சற்றுச் சிந்தித்தே வெட்டுவார்கள். ஆனால், இன்று மனிதனையே துடிக்கப் பதைக்க வெட்டுகின்ற அவல நிலைமையே காணப்படுகின்றது.

இன்று புதிய புதிய வருத்தங்கள், நோய்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் 'எயிட்ஸ்' என்ற நோயினால் பலர் இறந்தார்கள். தற்போது இரண்டு நாள்களிலேயே மரணம் அடைகின்ற நோய் காணப்படுகின்றது. இதனைச் சொல்பவர்கள் யார்?

ஒரு நிகழ்வுக்குச் சென்ற நாம் அங்குள்ள எமது உறவினர்கள் நண்பர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு அருகில் அமர்ந்து கொள்கின்றோம். இந்த செயல்களுக்கு மகிழ்ச்சியானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் அமைகின்றது. அதே போன்று இறைவனையும் தேடிச் சென்று அவருக்கு நெருக்கமானவராக அமர்ந்துகொள்ளவேண்டும்.

முன்னைய காலங்களில் வாழ்ந்த சமய குரவர்களைப் போன்று எம்மால் வாழமுடியாது. ஆனால், அவர்கள் காட்டிய அன்பு வழியில் நாமும் வாழப் பழகிக்கொள்ளவேண்டும்.

எமது வாழ்க்கையை நாளாந்தம் இறைவன்தான் வழிநடத்துகின்றார். ஆனால், நாம் இதனை உணர்ந்துகொள்வதில்லை. நாம் கோபத்துடனும், துன்பத்துடனும் அன்றாடம் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றோம். இந்நிலைமைகளில் இருந்தும் விடுபட நாம் மீண்டும் இறைவனுடன் இணைந்துகொள்ளவேண்டும் - என்றார்.

மேற்படி ஐஸ்வர்ய ஹோமம் நிகழ்வில் சுமார் ஐநூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். (எ-86-5)

### நாளை

பங்குனி 17
வியாழக்கிழமை
(10.04.2003)
திதி : அட்டமி
பிற்பகல் 12.43 வரை.
நட்சத்திரம்: புநர்பூசம்
பிற்பகல் 2.44 வரை.
சுபநேரம் : 7.33 - 9.06
ராகுகாலம் : 1.36 - 3.06
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உங்கள் மனதில் தோன்றுவதை உடனே வெளிப்படுத்துங்கள் இல்லாவிட்டால் சில நாள்கள் கழித்து உங்கள் கருத்தையே பிறரிடம் உபதேசமாகக் கேட்கவேண்டிவரும்.

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு செவ்வாய் தோறும் பயிற்சி வகுப்பு

## திருநெல்வேலியில் நடைபெறும்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கான விவசாயப் பயிற்சி வகுப்பு திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நேற்று இடம்பெற்றது. இந்த வகுப்பு இம்மாதம் 15ஆம், 22ஆம், 29ஆம் திகதிகளிலும் இடம்பெறுகின்றது.

வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும் இப் பயிற்சி வகுப்பில் -

15ஆம் திகதி "சாடிப் பயிர்ச் செய்கை" என்ற விடயம் தொடர்பாகவும் -

22ஆம் திகதி "நாற்றுமேடை அமைப்பும் பராமரிப்பும்" என்ற விடயம் தொடர்பாகவும் -

29ஆம் திகதி "ஒருங்கிணைந்த பயிர் போசனை நடைமுறை" என்ற விடயம் தொடர்பாகவும் - பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (ஒ-11)

# தென்மராட்சிப் பாடசாலைகளில் முறைசாராக் கற்கைக்கு விண்ணப்பம்

தென்மராட்சி,ஏப்.9

தென்மராட்சி கல்வி வலயத்தைச சேர்ந்த பின்வரும் பாடசாலைகளில் முறைசாராக் கல்வி நெறிகள் விரைவில ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பாடநெறிகளில் பங்குபற்றி பயிற்சி பெறவிரும்பும் படித்த இளைஞர், யுவதிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பாடசாலை அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு வலயக கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் வானொலி திருத்தல், பெண்களுக்கான உடையமைத்தல் ஆகியவையும் -

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பெண்களுக்கான உடையமைத்தல் பயிற்சியும் -

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சிகை அலங்காரமும் ஒப்பனையும் பயிற்சியும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சியும் - நடைபெறவுள்ளன.

இதேவேளை - இப்பயிற்சி நெறிகளுக்கு கற்பிக்கக்கூடிய போதனாசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (எ-117)

# பத்தேகம பாடசாலை மூடப்பட்டது

12 ஆசிரியர்களையும், 2 மாணவர்களையும் மட்டும் கொண்டு இயங்கிய பத்தேகம கனிஷ்ட பாடசாலையை தென்மாகாண கல்வித் திணைக்களம் அண்மையில் மூடியுள்ளது.

1938ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் அண்மைக் காலம்வரை சுமார் ஆயிரம் மாணவர்கள் கற்று வந்தனர் என்றும்-

எனினும், அப்பகுதியில் வாழும் மக்கள் நகரத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்கத் தொடங்கியதையடுத்து அந்தப் பாடசாலையின் மாணவர்தொகை இரண்டாகக் குறைந்து விட்டது என்றும் - கூறப்பட்டது.

மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைந்ததையடுத்து அந்தப் பாடசாலை மூடப்பட்டதுடன், அங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள் அப்பிரதேசத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (எ)

# பேச்சு, கட்டுரை - போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு அறநெறிப் [illegible] மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பேச்சு, கவிதை, கட்டுரை, சிறுகதை, பண்ணிசை எனப் பல்வேறு போட்டிகள் இவ்வாறு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் முறையே வருமாறு:-

### பேச்சு

க.லதீகரன் (யாழ். இந்துக் கல்லூரி), க.உஷாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சி.தர்சிகா (மானிப்பாய் மெ.ஆ.பாடசாலை).

### கவிதை

ஜெ.மதுரா (உடுவில் மகளிர் கல்லூரி), சி.நிரோஜா (மானிப்பாய் மெ.ஆ.பாடசாலை), பொ.நிரோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

### கட்டுரை

சி.கௌசிகன் (யாழ். மத்தியகல்லூரி), க.யஸ்மிலா (வேம்படி மகளிர் கல்லூரி), சி.நவநீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

### சிறுகதை

சி.பாலரமணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), நா.கண்ணன் (நவாலி மகாவித்தியாலயம்), வி.பிரணவி (சங்குவேலி அ.த.க. பாடசாலை), ச.இந்துலக்ஷன் (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்) - மூன்றாம் இடத்தை இருவர் பெற்றுள்ளனர்.

### பண்ணிசை

ஜெ.வைஸ்ணவி (மானிப்பாய் மெ.ஆ.பாடசாலை), க.அருள்நந்தி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), சி.கோமளதரன் (யாழ். இந்துக் கல்லூரி), அ.பிரியங்கா (உடுவில் மகளிர் கல்லூரி) மூன்றாம் இடத்தை இருவர் பெற்றுள்ளனர்.

மேற்படி வெற்றிபெற்றுள்ள மாணவர்களுக்கான பரிசில்கள் கடந்த திங்கட்கிழமை மருதடி விநாயகர் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.(எ-ரி-90)

# முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.9

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான முன்பள்ளி பயிற்சிக் கருத்தரங்குகளை எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் ஆறு தினங்கள் யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடத்தவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவுள்ள தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை வலய அலுவலகத்தில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# உயிர்ப்பின் மகிமையை அடைவோம்!

**தவக்காலச்சிந்தனை 36ஆம் நாள்-**

இறை அருளின் காலமான இத தவக் காலத்தின் பல நாள்களை [illegible] விசமான தபமுயற்சிகளில் ஈடுபடுத்தி [illegible] தயார்ப்படுத்திய போது இறைமகனின் உன்னத உத்தானத்திற்கு பங்கேற்க எந்தளவிற்கு நாம் தகுதியுடையோராக இருக்கின்றோம் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கிறிஸ்துவும் தமது உயிர்ப்பின் மகிமையை உலகிற்கு வெளிப்படுத்த தம் வாழ்நாள் முழுவதும் தம்மைத் தயார் செய்தார். அவர் செய்த ஒவ்வொரு செயலும் அவரது உயிர்ப்பையே முன்நோக்கி இருந்தது. ஆனால், எமது வாழ்வு எப்படி இருக்கிறது? மழைக்கு முளைக்கும் காளான்கள் போன்று அவ்வக் காலத்துடன் மட்டும் எமது வாழ்வின் நற்செயல் கருகிவிடுகின்றனவா? மாறாக நாளாந்தம் புரியும் நற்செயல்கள் மூலம் உயிர்ப்பின் மகிமையை, மகிழ்வை எம்மிலே அனுபவிக்கின்றோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பில் நாம் முழுமையாய் பங்குபற்ற விரும்பினால் நாமும் அவரைப் பின்பற்றி வாழ வேண்டும். நாளுக்கு நாள் அவரிடம் நெருங்கிச் செல்ல வேண்டும். நமது செபங்களும், செயல்களும், முயற்சிகளும் எம்மை அவருக்கு அருகில் கொண்டு செல்வதாக அமைய வேண்டும். ஏனெனில், எம் பாவங்களே நம்மை கிறிஸ்துவிடமிருந்து புறம்பாக்குகின்றன. அவரிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றன. இதனால், வாழ்வின் மகிழ்வை அடைய முடியாது அமைதி இழக்கின்றோம். ஏனெனில் உள்ளத்தின் அமைதியிலேயே இறைவன் எம்முடன் பேசுகின்றார்.

எப்பொழுதும் பிறருக்குத் திறந்த உள்ளம் கொண்டிருந்த இயேசு பிறரைப்பற்றியே சிந்தித்தார். பிறருக்காகவே வாழ்ந்தார். அவ்வாறே எமது வாழ்வும் மற்றவர்களுக்காக மாற வேண்டும். 'பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதை நீ முதலில் அவர்களுக்குச் செய்' என்ற கிறிஸ்துவின் வார்த்தையை வாழ்வில் ஏற்று நற்செயல் மூலம் விண்ணுலக செல்வத்தை வாழ்விலே பெருக்கி உயிர்ப்பின் மகிமையில் எம்மையும் பங்காளிகளாக்குவோம். ☆

**எஸ்.எம்.வுளோறன்ஸ்**


# நினைவஞ்சலி



செல்வன்
பிரகாஷ் தண்டபாணிகதேசிகர்

அன்னை மடியில் 09-08-1986 — அம்பாள் அடியில் 29-03-2003

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் அவர்களது கனிஷ்ட புதல்வன் பிரகாஷ் அவர்கள் சித்திரபானு வருடம் பங்குனித் திங்கள் 15ஆம் நாள் இயற்கை எய்தியதையிட்டு அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி வல்வை மக்களும், மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினரும் பிரார்த்திக்கின்றார்கள்.

- தர்மகர்த்தா சபையினர்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
[illegible]டித்துறை. (16502)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்



திருமதி
சின்னத்தம்பி சின்னத்தங்கம்

தோற்றம் 09-05-1911 — மறைவு 10-03-2003

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09.04.2003) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"விநாயக வாசா",
[illegible] கிழக்கு, கைதடி. (16498) - குடும்பத்தினர்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



சந்திரதாஸன் சப்றீனா

ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
சந்திரதாஸன் - கேமலதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி செல்வி சப்றீனா அவர்கள்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (09.04.2003) புதன்கிழமை தனது அப்பா அம்மாவுடன் சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். அவரை நயினை நாகபூசனி அம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ்க, வளர்கவென அரியாலையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா மற்றும் அப்பப்பா பஞ்சாட்சரம், அப்பம்மா மதுரவேணி, சுவிஸிலுள்ள பெரியப்பா குடும்பம், அத்தை, அரியாலையில் வசிக்கும் சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், மைத்துனர், மைத்துனிமார் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை. — அம்மப்பா, அம்மம்மா. (16490)

# விற்பனைக்கு

எம்மிடம் பாவித்த ஸ்ரீரியோ, மோனோ (STERO, MONO, 2002, 2060, [illegible], [illegible], 2552) SONY T.V. கள், SONY RX தொடக் ரேடியோக்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
முகுந்தன் எலக்ரோனிக் அன் பான்ஸி
கே.கே.எஸ். வீதி, [illegible]. (16620)

கல்விச் சேவையில்...
03 தசாப்தங்களைக் கடந்த நிறுவனத்தில்

# O/L Dec.03 DAY CLASS

(காலை 8.30 - பி.ப.1.15)

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பு: இம்மாதம் 15ஆம் திகதியின் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டா.

The Express Institute - அதிபர்.
Irupalai, Kopay. (16492)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!

மாபெரும் அதிரடி — மலிவு விற்பனை

பட்டுச்சாரி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், சல்வார் கமீஸ், சுடிதார் வகைகள், பேபி கவுண் வகைகள்

சேட், T.சேட், கோட் சூட் வகைகள், டெனிம், சோக்சோ ரவுசர், ரவுசர் வகைகள், [illegible]

ரூபா 5000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களில் ஆணுக்கு அழகிய T-சேர்ட் ஒன்றும் பெண்ணுக்கு அழகிய பிளவுஸ் ஒன்றும் அன்பளிப்பு

08.04.2003 முதல் 14.04.2003 வரை



மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்

(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)

10, 11, பெரியகடை வீதி (மலாயன்கபே முன்பாக), யாழ்ப்பாணம்.

(C/27156)

# எய்ட்ஸைப் போலவே அச்சுறுத்தும் ஆட்கொல்லி நோய் சார்ஸ்!

அமெரிக்கா ஈராக் போரை விட உலகெங்கிலும் இப்போது கலக்கத்தை ஏற்படுத்தி வரும் விடயம் 'சார்ஸ்' நோயாகும்.

Severe Acute Respiratory Syndrome என்பதன் சுருக்கமே SARS. தமிழில் 'சார்ஸ்' என்று எழுத ஆரம்பித்திருக்கிறார்கள்.

என்ன அது... 'எய்ட்ஸ்' போல 'சார்ஸ்' என்று யோசிக்கிறீர்களா?

மிகச் சரி. எய்ட்ஸ் போலவே இதுவும் ஓர் உயிர்கொல்லி நோய்தான்.

30 ஆண்டுகளுக்கு முன்பு முதல்முறையாகக் கண்டறியப்பட்டபோது உலகம் முழுவதும் எய்ட்ஸ் எத்தகைய பீதியைக் கிளப்பியதோ அதே போல இன்று உலகை அச்சுறுத்தும் இன்னொரு கொடிய நோயாக உருவெடுத்து வருகிறது சார்ஸ்.

சீனாவின் தென் மாநிலமான குவாங்டாங்கில்தான் சார்ஸ் முதலில் தாக்கியது. இது என்ன நோயாக இருக்கும் என்று மருத்துவர்களுக்கே பிடிபடாத புதிராக இருந்தபோதே அடுத்தடுத்துப் பலர் உயிரிழந்தார்கள். சீன அரசு கொஞ்சம் தாமதமாகத்தான் விழித்துக்கொண்டது. பிறகு மும்முரமாகச் செயற்பட்ட சீன மருத்துவ நிபுணர்கள் ஒருவழியாக பெப்ரவரி மாத மத்தியில் நோய் மேலும் பரவாமல் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தார்கள்.

ஆனால், சார்ஸ் வேகமாகக் பரவக்கூடிய தொற்று நோயாயிற்றே... சீனாவிலிருந்து ஹொங்கொங், அங்கிருந்து வியட்நாம், சிங்கப்பூர், பிறகு கனடா... கடைசியாக ஆஸ்திரேலியா வரை இந்நோய் வேகமாகப் பரவிவிட்டது.

உலகம் முழுவதும் 14 நாடுகளில் சுமார் ஆயிரத்து700 பேர் சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இவர்களில் 100 பேர் உயிரிழந்துவிட்டார்கள்.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி என வளமையும் வாழ்க்கைத் தரமும் மிகுந்த நாடுகளும் இந்நோயின் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை. இந்நாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்றன.

இப்போதைக்குப் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பது ஹொங்கொங்தான். அங்கு இதுவரை இந்நோய்க்கு 15 பேர் பலியாகியிருக்கிறார்கள். தவிர, ஹொங்கொங் நகரின் முக்கியப் பகுதியில் ஆயிரக்கணக்கானோர் வசிக்கும் அமோய் கார்டன் குடியிருப்பில் 200இற்கும் மேற்பட்டவர்களை இந்நோய் தாக்கியிருக்கிறது. இதனால் ஹொங்கொங் அரசு அந்தக் குடியிருப்புவாசிகளை ஒதுக்கி வைத்திருக்கிறது. அரசின் அனுமதி இன்றி அங்குள்ளவர்கள் வெளியே சென்றால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் அந்த அளவுக்கு வேகமாக இந்த நோய் அங்கு பரவிவருகிறது.

ஹொங்கொங்கில் பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. விமான நிலையங்களில், துறைமுகங்களில் வெளியூர்ப் பயணிகள் மருத்துவக் குழுக்களின் தீவிரச் சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகிறார்கள். ஹொங்கொங், டோக்கியோ பங்குச் சந்தைகளின் குறியீட்டெண்கள்கூட சார்ஸ் நோயின் எதிரொலியாக வீழ்ச்சி கண்டிருக்கின்றன. ஈராக் போரைக் காட்டிலும் பொருளாதார, வர்த்தக உலகில் புயலைக் கிளப்பியிருக்கிறது சார்ஸ்.

உலகின் பிறபகுதிகளும் இந்நோயால் பாதிக்கப்பட்டாலும் ஆசிய நாடுகளே பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன.

### அறிகுறிகள்தான் என்ன?

இந்த நோயின் அறிகுறிகள் எதுவும் பெரிதாகத் தெரியாது. சாதாரணமாக நமக்கு வரும் தலைவலி, காய்ச்சல் (101 பாகைக்கு மேல்), தொண்டைக் கரகரப்பு, இருமல், பசியின்மை, பேதி, மூச்சுத் திணறல் இவைதான் இந்நோயின் அறிகுறிகள். மார்பை எக்ஸ்ரே படம்பிடித்துப் பார்த்தாலும் இந்நோய்க்கான அறிகுறியைக் கண்டறிய முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.



சார்ஸ் நோயிலிருந்து தப்பிப்பதற்காக ஹொங்கொங் குடியிருப்பிலிருந்து பீதியுடன் வெளியேறும் இளைஞர்

குறிப்பாகச் சொன்னால் நிமோனியா காய்ச்சல் போலத் தெரியும். தீவிரப் பரிசோதனைக்குப் பிறகு அது சார்ஸ் நோயா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

நுரையீரலில் உள்ள துளைகளில் கிருமிகள் அண்டி அதன் இயல்பான செயல்பாட்டைத் தாக்கும். தடுக்கும். அதுதான் நிமோனியா. அதுபோன்றே சார்ஸ் நோயும் நுரையீரலைத் தீவிரமாகத் தாக்கி நோயாளியின் உயிருக்கே உலை வைக்கும் என்று சொல்கிறார்கள் நிபுணர்கள்.

### இந்நோய் எதனால் ஏற்படுகின்றது?

இந்நோய்க்கான காரணம் தான் மருத்துவ உலகின் இன்றைய பெரும் புதிர். உலகம் முழுதுவம் உள்ள முக்கியமான 11 நோய்க் கிருமி ஆய்வு மையங்கள் ஒருங்கிணைந்து முழுமூச்சுடன் அதைக் கண்டறியும் முயற்சியில் இறங்கியிருக்கின்றன.

இந்நோய் பக்டீரியாவால் உண்டாகிறதா அல்லது வைரஸ் எனப் பொதுவாக அறியப்படும் நோய்க் கிருமிகளால் உண்டாகிறதா என்ற சந்தேகம் இன்னும் நீடிக்கிறது.

பெரியம்மை, தட்டம்மை போன்ற நோய்களை உருவாக்கும் கிருமி வகையைச் சார்ந்த ஒரு புதிய கிருமியே இந்நோய்க்குக் காரணமாக இருக்கலாம் என்று மருத்துவ நிபுணர்கள் ஊகிக்கிறார்கள். என்றாலும் அது ஆய்வுபூர்வமாக இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

சாதாரணமாக தடிமன் அடிக்கடி எல்லோருக்கும் வரும். ஓரிரு நாள்களில் அது சரியாகிவிடும். அதை உருவாக்கும் கிருமியின் விஸ்வரூபமே சார்ஸ் நோய்க்கு ஆதாரமாக இருக்கலாம் என்பது மருத்துவ உலகில் நிலவும் இன்னொரு கணிப்பு.

Paramyxovirus அல்லது Coronavirus ஆகிய இரண்டில் ஒரு வைரஸ் இந்நோய்க்கு அடிப்படையாக இருக்கலாம் என்பதுதான் இதுவரை மருத்துவ நிபுணர்களின் ஆய்வுக்குக் கிடைத்த பதிலாக இருக்கிறது.

இரத்தத்தில் பிளேட்லெட் (இரத்தத்தை உறைய வைக்கும் அணுக்கள்) அளவு சராசரியாக ஒரு மனிதனுக்கு 1.50 லட்சம் முதல் 3 லட்சம் வரை இருக்கும்.



குழந்தையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடும் தாயொருவர்.

இந்த அளவுதான் இரத்த ஓட்டம் மற்றும் அது சார்ந்த இயக்கத்தை ஒழுங்காக வைத்திருக்கும்.

இந்த அளவு குறையும் போது அது நோய் எதிர்ப்புச் சக்தியை வீழ்ச்சியடையச் செய்து உடலியக்கத்தில் சிக்கல்களை ஏற்படுத்தும். இதை Thrombocytopenia என்கிறார்கள். சார்ஸ் நோயால் தாக்கப்பட்டவர்களிடம் இந்த அறிகுறியும் இருக்கலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

### எப்படிக் குணப்படுத்த முடியும்?

உலகையே ஆட்டிப்படைக்கும் எய்ட்ஸ் நோயைப் போல இதற்கும் மருந்து இல்லை. நோய்க்கான கிருமியைக் கண்டுபிடித்தால்தானே அதை ஒழிக்கும் மருந்தையும் கண்டுபிடிக்க முடியும்? என்னதான் வேகமாக ஆராய்ச்சி நடந்தாலும் அது உடனடியாகச் சாத்தியமில்லை என்றே மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஹொங்கொங்கிலும் இதர இடங்களிலும் இந் நோயால் தாக்கப்பட்டவர்களுக்குப் பிறகு எப்படித்தான் சிகிச்சை அளிக்கிறார்கள்..?

மருத்துவர்கள் தங்கள் நிபுணத்துவத்தின் அடிப்படையில் வெவ்வேறு நோய் எதிர்ப்பு மருந்துகளை இணைத்தோ அல்லது தனித்தோ நோயாளிகளுக்குத் தந்து, நோயின் தீவிரத்தைக் குறைக்க முற்படுகிறார்கள். ரிபாவைரின் என்ற நோய் எதிர்ப்பு மருந்தையும் 'ஸ்டீரியாட்ஸ்' எனப் பொதுவாக அறியப்படும் ஊக்க மருந்து வகைகளையும் மருத்துவர்கள் பரவலாகப் பயன்படுத்துவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அது பலனளிக்காத பட்சத்தில் நோயாளிகள் உயிரிழக்கிறார்கள்.

ஆரம்பக் கட்டத்தில் மருத்துவர்கள் நினைத்ததைவிட மிக வேகமாக இந்நோய் பரவுவதாக இப்போது நம்பப்படுகிறது.

இந்நோய்க் கிருமிகள் காற்றில்கலந்து எளிதில் மற்றவர்களுக்கும் மற்ற நாடுகளுக்கும் பரவுகின்றன. சார்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்த ஒரு டாக்டர் ஹொங்கொங் சென்றதால்தான் இந் நோய் அங்கு பரவியதாகக் கருதப்படுகிறது. மேலும் இந்நோய் குறித்த முதற்கட்ட ஆய்வில் முக்கியப் பங்கு வகித்த டாக்டரே அதற்குப் பலியாகிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும் போதோ அல்லது தும்மும் போதோ வெளியேறும் கண்ணுக்குத் தெரியாத நோய்க் கிருமிகள் எளிதில் மற்றவர்களைத் தொற்றி நோயை உண்டாக்கும்.

உதாரணத்துக்கு சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொலைபேசியில் பேசுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். பேசும்போது அவர் இருமலாம் அல்லது தும்மலாம். அவர் பேசிவிட்டுச் சென்ற பிறகு அதே தொலைபேசியை எடுத்து இன்னொருவர் பேசிவிட்டு, அந்தக் கையால் கண்ணை அல்லது மூக்கை அல்லது வாயைத் துடைத்தாலே போதும்... சார்ஸ் அவரையும் தொற்றிக்கொள்ளும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடலிலிருந்து இருமல் அல்லது தும்மல் மூலம் வெளியேறும் நோய்க் கிருமி, கிட்டத்தட்ட 3 முதல் 6 மணி நேரம் வரைகூட மற்றவர்களைத் தாக்கும் அல்லது தொற்றும் திறனுடன் இருக்க வல்லது என்பது மருத்துவர்கள் கணிப்பு.

### உலகையே குலுக்கியிருக்கும் இந்தநோயிலிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்வது எப்படி?

சுவாசிக்கும் காற்றை வடிகட்டி (கூடியவரை) அனுப்பும் முகக் கவசத்தை அணிந்து கொள்வது முதற்கட்டப் பாதுகாப்பு. ஹொங்கொங்கில் இதற்கென்றே தயாரிக்கப்பட்ட அழுத்தமான முகக்கவசத்தை எல்லோரும் வாங்கி அணிந்துகொள்கிறார்கள்.

தூசி ஒவ்வாமை உள்ளவர்கள் மூக்கையும் வாயையும் மறைக்கும் துணிக்கவசத்தைக் கட்டிக்கொண்டு செல்வதைப் பார்த்திருப்பீர்கள். டாக்டர்கள் அறுவைச்சிகிச்சை செய்யும் போது அணிந்துகொள்கிறார்களே அதே மாதிரி ஒரு கவசத்தை வெளியில் செல்லும் போது எல்லோரும் அணிந்து கொள்வது நல்லது.

மற்றவர்களிடம் பேசும் போது இரண்டடி அல்லது மூன்றடி தள்ளி நின்று பேசுவது உசிதம். மூன்றடி தூரத்துக்குள் இந்நோய்த் தொற்றுக்கான வாய்ப்பு அதிகம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்நோய்க் கிருமி உடலில் தொற்றிய ஒரே வாரத்துக்குள் நோயாளி அதன் தீவிரத் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும்.

எத்தனை நெருக்கமாகப் பழகினாலும், இடைவெளியே ஆரோக்கியம்.

வெப்ப நாடுகளில்தான் இந்நோய் வேகமாகப் பரவும். அதுவும் கோடைகாலம் என்றால் கேட்கவே வேண்டாம்.

நமது நாடு வெப்ப நாடு. நமக்கு இது கோடைகாலமும் கூட. ஆகவே அவதானமாக இருங்கள்

இந்நோயிலிருந்து தற்காத்துக்கொள்ள முக்கியமான வழி அடிக்கடி கைகளைக் கழுவுவதுதான் என்று பரிந்துரைக்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

காரியம் முடிந்த பிறகு கை கைகழுவிவிடுவது நம்மில் பலருக்குத் தெரிந்ததுதானே என்று நினைக்கிறீர்களா..?

அந்தக் கை கழுவல் இல்லை இது.

மெய்யாகவே தண்ணீர் ஊற்றிக் கைகளைக் கழுவுவதுதான் அந்தத் தற்காப்பு நடவடிக்கை.

இல்லையெனில்... காரியம் முடிந்துவிடும் ★

# இயேசு சுகமளிக்கிறார்

துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த அதே நற்செய்திக் கூட்டம் விசுவாசிகள் சபைக்கு அண்மையில் இருக்கும் மைதானத்தில் இன்று 09.04.2003 பிற்பகல் 4.00மணிக்கு நடைபெறும்

இடம்: கலாசாலை வீதி, திருநெல்வேலி.

தீர்க்கதரிசன செய்தியும் ஜெபமும்

சகோதரன் டானியல் (ஜேர்மனி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாருங்கள்! தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

P.அருமைநாயகம்.

(16535)


## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

தோற்றம் 18 - 07 - 1918



மறைவு 09 - 04 - 1990

**அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா**

*(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)*

"மனிதருக்கென்றே ஊழியஞ் செய்யாமல்
கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள"

*எபேசியர் 6:8*

தகவல்:
அ.ஜெயராஜன் (மகன்)

*வட்டுக்கோட்டை.* (16536)

## நினைவஞ்சலி

தோற்றம் 18 - 01 - 1934



மறைவு 10 - 02 - 2003

**அமரர் கந்தையா மகேந்திரநாதன்**

வாழ்க்கை வரலாறு

உரும்பிராய் வாசியாகிய திரு. சரவணமுத்து கந்தையாவுக்கும் மனைவி அன்னம்மாவுக்கும் தங்கரத்தினம், தங்கராசா, கனகரத்தினம், புனிதவதி ஆகிய நால்வரின் பின் 1934 தை 18ஆம் திகதி அவதரித்தார் கந்தையா மகேந்திரநாதன்.

ஐந்தாவது பிள்ளை கெஞ்சினாலும் கிடையாது என்பது ஓர் ஐதீகம். கடைக்குட்டிப் பிள்ளையானதால் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. இதனால் பிடிவாதம், நினைத்தை உடனே செய்வது, குறும்புகள் ஆகியவற்றை இளமையிலேயே வளர்த்துக் கொண்டார். ஆரம்பக்கல்வியை உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்திலும் பின்னர் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்தவர், உதைபந்தாட்டத்தில் மிக வீரனாக விளங்கிப் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டார். கல்லூரிப் படிப்பை முடித்து விவசாய இலாகாவில் பணிபுரிந்த இவர் மானிப்பாய் வாசியான திரு.கனகரத்தினம் அன்னம்மா தம்பதியின் மகள் மனோன்மணியை 1985ஆம் ஆண்டு மணம் செய்து கொண்டார். ஆசைக்கு மாலதி என்ற பெண்ணையும் ஆஸ்திக்கு சங்கர் என்ற மகனையும் பெற்றார். பின்னர் ஓமான் நாடு சென்று பணி புரிந்தார்.

மலேசியாவைச் சேர்ந்த ஆறுமுகம் மீனாம்பாள் தம்பதியின் புத்திரன் திரு.இராமலிங்கம் அவர்கட்கு தனது மகள் மாலதியை கன்னிதானம் செய்து விஜித்தா, சங்கீதா, கிருஷித்தா ஆகிய மூவருக்கும் பாட்டனானார். மகன் சங்கரும் மலர் என்னும் மங்கையை மணந்து மிகித்தம், ஆஷிக்கா ஆகியோருக்கும் பாட்டனானார். நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக மனைவியுடன் வந்து மலேசியாவில் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினார். அவரது நல்வாழ்வுக்கு திரு.திருமதி அன்னப்பாவும், திருமதி இராஜேந்திரனும் உறுதுணையாக விளங்கினர். பிற நாட்டில் வாழ்ந்த போதும் தான் பிறந்த பொன்னாட்டையும் சுற்றத்தாரையும் மறந்ததில்லை.

பிறந்தமண்ணின் மோகமும், சுற்றத்தாரின் பாசமும் விசேஷமாகத் தான் அரவணைத்து வளர்த்த அருமை மகள் சுசிலாதேவி சாரங்கபாணியைப் பார்த்த பின்னரே பரமனடி சேர்வேன் என்ற வேகத்தில் எல்லோரும் தடுக்க உரும்பிராய், திருகோணமலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் எல்லாம் சுற்றித்திரிந்தார். அங்கு நோயுற்ற நிலையில் அவரை எவ்வாறாயினும் நான் மலேசியாவுக்கு கொண்டு செல்வேன் என்ற துணிவுடன் கணவரின் ஒத்துழைப்புடன் இலங்கை வந்து பல கஷ்டங்கள் மத்தியிலும் மகள் மலேசியா அழைத்துச் சென்றார். அங்கு 2003ஆம் ஆண்டு மாசி மாதம் 10ஆம் திகதி அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தார்.

வண.அன்னப்பா ஜெயக்குமார் திருமதி புனிதவதி ஜெயமோகன்
வன்னிப்பிராந்தியம். மலேசியா.

(16537)


# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

### தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம்: 21.04.2003

**I. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING.** DURATION 1 YEAR.

**B. DIPLOMA IN MICRO SOFT OFFICE** DURATION 6 MONTHS.

**C. DIPLOMA IN TYPE SETTING** DURATION 3 MONTHS.

**D. DIPLOMA IN COMPUTRISED ACCOUNTING** DURATION 4 MONTHS.

**E. DIPLOMA IN DESK - TOP PUBLISHING** DURATION 6 MONTHS.

**F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L** DURATION 3 MONTHS.

**II. CERTIFICATE COURSES:-**

| | | |
|---|---|---|
| i) M.S. WORD - 2000 | vi) PASCAL | xi) d BASE FOR WINDOWS |
| ii) M.S. EXCEL - 2000 | vii)d BASE iii* | xii)PRINT SHOP DELUXE |
| iii)M.S. ACCESS - 2000 | viii)PAGE MAKER | xiii) ADOBE PHOTO SHOP |
| iv) M.S. POWER POINT | ix) WINDOWS 95 | |
| v) VISUAL BASIC VER 6.5 | x)COREL DRAW | |

**EACH 3 MONTHS**

| | |
|---|---|
| III.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| IV. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII.வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII.கடைச்சல் இயந்திர தொழில்பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. மின் ஒட்டுநர் பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| X. மரவேலை (With Use of Machinery) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| XI. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு:- பாடசாலை மாணவர்களின் வசதிகருதி மாலைநேர வகுப்புகளும் ஆரம்பமாகின்றன என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**எமது நிறுவனத்தில் கணனிகள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.**

Note:-

1. பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER...!**

**கட்டமைத்தலும் திருத்தலும்**

சகலவிதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஒட்டுவேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

**வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்**

*வாகன தகுதிச் சான்றிதழ் - 2003*

**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2003 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை அறியத்தருகின்றோம். ஏற்கனவே வாகனங்களை பரிசோதித்து சான்றிதழ் பெறாதவர்கள் உடன் எம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும். அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கான ENGINE NO பொறித்துக் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:-

REGISTRAR,
**PATRICIAN INSTITUTES,**
59, ST. PATRICK'S ROAD,
JAFFNA.

(சி-27223)

# ஆஸ்பத்திரி எழுதுநர்களின் கோரிக்கைகள் பரிசீலிப்பு

## இம்மாத இறுதிக்குள் தீர்வு கிடைக்கும்

யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகப் பகுதி எழுதுவினைஞர்களின் சம்பள உயர்வு, பதவிப் பெயர் மாற்றம் உட்பட பல கோரிக்கைக்கு இம்மாதம் 30ஆம் திகதிக்குள் தீர்வு காணப்படும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலை எழுதுவினைஞர் கூட்டுக்குழு, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அமைச்சுச் செயலர் ஆகியோருடன் கலந்துரையாடியிருக்கிறது என்றும் - எழுதுவினைஞர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. அவற்றுக்கு இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் தீர்வுகாணப்படும் என உறுதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் -

கூட்டுக்குழுவின் தலைவர் தமக்குத் தகவல் தந்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாக அதிகாரி எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

இதன்காரணமாக எழுதுவினைஞர்களின் சுகவீன லீவுப் போராட்டம் இடைநிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஜ-3)

# பரதநாட்டியம் பயில மாணவர்களுக்கு அனுமதி

கொழும்பு,ஏப்.9

'பரதநாட்டியம்' கற்கை நெறியினைப் பயில்வதற்கு இந்த வருடமும் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக இந்திய கலாசார மையம் அறிவித்துள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளுதல் வகுப்புகள் நடைபெறும் கால ஒழுங்கு போன்ற விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 500014 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக இந்திய கலாசார மையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-6)

# யாழ். தளபதி மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

திருமலைக் கடற்பரப்பில் துருப்பினரை ஏற்றிச் சென்ற 'லங்காமுடித' கப்பல் மீது தாக்குதல் நடத்திய படகு வழமையாக புலிகள் பயன்படுத்துவது போன்ற ஒன்றல்ல என்று வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியதாக வெளியான தகவலை அவர் மறுத்துள்ளார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன அறிவித்திருக்கிறார்.

*ஆசிரியர் குறிப்பு* :- 'தாக்குதல் நடத்திய படகு வழமையாக புலிகள் பயன்படுத்துவது போன்ற ஒன்றல்ல' - என்று மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறினார் என செய்தியாளர் பிரட்றிக்கா ஜோன்ஸ் 'லங்கா அக்கடமிக்' இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டிருந்தார்.

கப்பல் தாக்கப்பட்டது பற்றி கடந்த முதலாம் திகதி உதயனில் முதல் பக்கத்தில் வெளியாகியிருந்த செய்தியிலும் அந்தத் தகவல் சேர்க்கப்பட்டிருந்தது. (ஆ-ர்)


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இணைந்து செய்யும்

ராசி சில்க்ஸ் நல்லி

மாபெரும் மலிவு விற்பனை
உண்மை! உண்மை!! உண்மை!!.
ஆனால் நம்பமாட்டீர்கள்.
ஒரு தரம் வந்து பார்த்தால் தெரியும் அதன் உண்மையை.
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை.
சாறிகளில் எத்தனையோ வகை!
70 டிசைன்களுக்கு மேல் (நோமல் முதல் பனாரிஸ் வரை).
☆ பஞ்சாபி ஹிற், சோலி ஹிற் எத்தனையோ டிசைன்களில் எண்ணற்றவை.
☆ சிறுவர்கள் ஆடைகள் பல டிசைன்களில்.
இளையவர் முதல் பெரியவர் வரை
அனைத்து ரக ரெடிமேற் ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
ஏப்ரல் - 07 முதல் 14 வரை இக்கழிவு.

ராசி சில்க்ஸ்
70, 71A நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5571

(சி-27214)

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5573


# 5ஆவது வருட நினைவு தினம்

உதயம் 11 - 01 - 1912



அஸ்தமனம் 09 - 04 - 1998

## திருமதி சிதம்பரம் நாகமுத்து

வெஞ்சமருக்கொதுங்கி நின்றோம்
வெந்தணல்கள் சுடுகுதம்மா
ஐந்து வருடம் சென்றாலும்
நெஞ்சமின்னும் ஆறவில்லை!

*தகவல்: செல்வி செல்லம்மா நாகமுத்து*
*'சிதம்பரம்'*
*மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.* (16420)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 - 04 - 1933



விண்ணில் 19 - 02 - 2002

## அமரர் ப.க.மகாலிங்கம்

(மணியம்) (நமசிவாய அடியான்)
ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்

ஆண்டொன்று உருண்டோடிப் போன போதும்
ஆறவில்லையெங்கள் துயர் இன்னுமப்பா!
மாண்டவர்கள் மீண்டதில்லை என்றவுண்மை
உணர்ந்தபின்னும் ஏங்குகின்றோம் உங்கள் பிரிவால்
நயினைத்தாய் பாதங்கள் தினமும் போற்றி
அவளருளை வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!!

*22, புகையிரத நிலைய வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (16503)

மாறாத அன்புடன்,
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1933 - 04 - 10



உதிர்வு 2003 - 03 - 10

## அமரர் சின்னத்தம்பி கதிரேசன்

திதி - 09.04.2003

அன்பின் அணிகலமே பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே குவலயத்தின் உத்தமரே!
பரிதவிக்கவிட்டு எங்கு ஐயா சென்றீர்?
உறவுகள் மட்டுமல்ல தேசமே தேடுகின்றது
மனங்களில் மறையாத மாவிளக்கே - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்

*56,பூமகள் வீதி,*
*அரியாலை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(16474)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# 16ஆம் நாள் ஞாபகார்த்த அஞ்சலியும் நன்றியும்

# அந்தியேட்டி ஆத்மசாந்தி அழைப்பும்

மண் மகிழ 29 - 09 - 1989



கண் நெகிழ 26 - 03 - 2003

## செல்வி குவலயா ஸ்ரீதரன்

(யாழ். வேம்படி மகளிர் மாணவி, தரம் 9C)

நெஞ்சில் நிறைந்த அன்பு மகளே! குவலயா!!
பிஞ்சில் மறைந்து போனதேனோ? கண்ணன்
கொஞ்சி மகிழ்ந்து குவலயம் விளங்க, வானுலக
மஞ்சத்தி லுறைந்து நீ மாண்புடன் திகழ்வாய்!

எமது அன்பு மகள் ஸ்ரீ.குவலயாவின் இன்னுயிரைக் காப்பாற்ற முயற்சித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் திடீர் மறைவு கேட்டு உடனே வந்து ஆறுதலும் தேறுதலும் கூறியும் இறுதிக்கிரியையின் போது சகல விதத்திலும் உதவியும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பல வழிகளிலும் உதவி, துன்பத்தில் பங்கேற்ற அன்பு மாணவச் செல்வங்களுக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் 10.04.2003 வியாழக்கிழமை அந்தியேட்டியும் 11.04.2003 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் வந்து கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ எமது மகளின் பிரிவின் ஆறாத சோகத்தினாலும் கால அவகாசம் போதாமையினாலும் தனித்தனியே அழைப்புகள் வழங்கமுடியாத நிலையிலிருக்கும் நாம் எங்கள் பிரிவுத்துயரில் பங்கேற்ற அனைத்து அன்புள்ளங்களையும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையோடு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

*1029/3, மதவடி ஒழுங்கை,*
*காங்கேசன்துறை வீதி,*
*நாச்சிமார்கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

சைவப்புலவர், கவிமணி, சிவநெறிக் கலாநிதி, வில்லிசைக் கலைஞர்
இராசையா ஸ்ரீதரன் (தந்தை),
திருமதி சந்தியபாமா ஸ்ரீதரன் (தாய்),
செல்வன் ஸ்ரீ.நிதர்சன் (சகோதரன்),
திரு.பேரானந்தம் (மாமா), திருமதி உமாராணி (அத்தை, ஆசிரியை)

(C/27203)

# கேள்வி அறிவித்தல், யாழ். கல்வித் திணைக்களம்

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வட கிழக்கு கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் பி.எஸ்.டி.ஜி. ஒதுக்கீட்டு நிதியிலிருந்து கீழ்க் குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகளை யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளரும் யாழ். வலயக் கல்வித் திணைக்கள கேள்விச்சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

02. இக்ராட்டு (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவர்களாகவும் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும் இருத்தல்வேண்டும்.

03. கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 2003.04.09 புதன்கிழமையிலிருந்து 2003.04.21ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 12.00 மணிக்கு முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் யாவும் எம்மால் 2003.04.30ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றையதினம் மு.ப. 10.30 மணிக்குக் கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

04. கேள்விப் பத்திரங்களை யாழ்.கல்வித் திணைக்கள பாடசாலைக் கட்டட கிளைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரம் தேவைப்படுமிடத்து, விவரங்களை இக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பெட்டி திறக்கும் நேரத்தில் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விலாசமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. யா/புனித பெனடிக்ற் றோ.க.த. மாடிக்கட்டட மீதி வேலை (90' 25') | 500.00 | 11000.00 | எம் 8 |
| 2. யா/இந்து ஆரம்பப் பாடசாலை மாடிக்கட்டட மீதி வேலை (21.34 7.62) | 500.00 | 10200.00 | எம் 8 |
| 3. யா/முத்துத்தம்பி ம.வி. மாடிக்கட்டட மீதி வேலை (70' 25') | 500.00 | 2600.00 | எம் 9 |
| 4. ஊரெழு கணேசா வித்தி. விஞ்ஞானகூடம் அமைத்தல் (40' 20') | 500.00 | 10000.00 | எம் 8 |

5. இவ்வேலைகளுக்கமைவான கேள்விப் பணத்தைக் குறித்த காலத்துக்குள் யாழ்.வலய கல்விபணிப்பாளர் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

6. கட்டட மதிப்பீட்டு அறிக்கையின் இரு பத்திரங்களில் ஒன்று மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொண்டு எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த ஆவணங்களைப் பூர்த்திசெய்து தேவையான இடங்களில் ஒப்பந்த காரரின் இறப்பர் முத்திரையும் அவரது கையொப்பமும் எழுதப்பட்டிருககவேண்டும். மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் பிரதியைத் தனியாக வேறு ஒரு கடித உறையிலும் இட்டு ஒட்டப்படல் வேண்டும். கடித உறையின மேல் பக்கத்தில் வேலையின் விவரம் அத்துடன் மூலப்பிரதி இணைப்புப் பிரதி என எழுதப்படல்வேண்டும். இரண்டு கடித உறைகளையும் பறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு மேல் மூலையில் வேலை விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டுத் தலைவர், கேள்விச்சபை, யாழ். கல்வி வலயம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டுப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 2003.04.30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும். குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்வி பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆவணங்கள் சரியாக நிரப்பப்படாத, சரியாக இணைக்கப்படாத, கூட்டல் பிழைகள், தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். ஒருவர் ஒரு வேலைக்கு ஒரு கேள்விப் பத்திரம் மட்டுமே பெறமுடியும்.

வரிமுறை வட்டி 10% தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கொடுப்பனவு கணிப்பீடுகள் சேர்த்துக்கொள்ளப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்த காலத்திலிருந்து மூன்று (03) மாதத்துக்குள் வேலையை முற்றாக முடித்து ஒப்படைக்கவேண்டும். எதுவித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

ப.விக்கினேஸ்வரன்
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம். 2003.04.08 (C/27234)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4 மணி - சென். நீக்கிலஸ் வி.க. எதிர் சென்.றோக்ஸ் வி.க.

பிற்பகல் 5.15 மணி - சென்.மைக்கல் வி.க. எதிர் சென்.றோக்ஸ் வி.க. (ஒ-5)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.9

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் அமரர் செ.சண்முகரத்தினம் 2 ஆம் ஆண்டு ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழகங்களின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி - தொண்டமனாறு கலைவாணி வி.க. எதிர் வரணி இளைஞர் வி.க.

இரவு 7.30 மணி - தொண்டமனாறு விவேகானந்தா வி.க. எதிர் உடுப்பிட்டி சிவகுமரன் வி.க.

இரவு 8 மணி - புத்தூர் கலைமதி வி.க. எதிர் வண்ணார்பண்ணை பவானி வி.க. (ஒ-5)

☆ ☆ ☆

தென்மராட்சி,ஏப்.9

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 12 ஆம திகதி சனிக்கிழமை தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15, 17 மற்றும் 19 வயது பிரிவுகளுக்கு இப்போட்டிகள் நடைபெறுமென யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா தெரிவித்துள்ளார்.(ஒ-5-117)

☆ ☆ ☆

வடமராட்சி,ஏப்.9

மேலைப்புலோலி தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும்,மறுநாள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

19 வயதுக்கு மேல், கீழ் என இரு பிரிவுகளாக சதுரங்கப்போட்டியும், பத்து ஓவர்கள் கொண்ட 8 பேர அடங்கிய அணிகளுக்கிடையேயான மென் பந்து கிரிக்கெட் போட்டியும் கரப்பந்தாட்டப்போட்டியும் வேறு பல போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (ஒ-173)

## பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு புதிய தலைவர்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக காலித் மஹ்மூத் நியமிக்கப்பட்டுள்ளார். 31 வயதான மஹ்மூத் 3 டெஸ்ட் மற்றும் 38 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிக்குப் பின்னா தலைவர் பதவியை இராஜினாமாச் செய்த காலித் மஸீத்துக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-5)

# தலைவரைக் குறிவைத்தே...

(III.ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது மக்களுக்குப் புலிகளின் வழிநடத்தலில் முழு நம்பிக்கையிருக்கிறது. அது போலவே நாமும் உறுதி தளராது இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ளோம்.

ஆனால், சிங்கள தேசத்தில் அவ்வாறான ஒரு சூழ்நிலை இல்லை. சிங்கள தேசத்தில் இப்போதும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரம்கொண்ட தீர்வைக் கொடுக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தவிடக் கூடாது என்பதில் பல சக்திகள் தீவிரமாக இயங்கி வருகின்றன. சிங்கள தேசம் பல பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது. கட்சிகள் மத்தியில் பிளவு, ஐ.தே.கவுக்கும் ஸ்ரீல.சு.கவுக்கும் இடையில் முரண்பாடு 'அம்மா'வுக்கும் ரணில் ஐயாவுக்கும் இடையில் பிரச்சினை, ஜே.வி.பி. முழு சிங்கள இளைஞர்களையும் அணி திரட்டிக்கொண்டு சமாதானத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறது. ஆகவே, சிங்களவர்களும் பிளவுபட்டுப்போய்க் கிடக்கிறார்கள். அது அவர்களுடைய பிரச்சினை. ஆனால், நாங்கள் உலகம் அங்கீகரிக்கக் கூடிய - உலகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய - தீர்வுத் திட்டத்தை முன்வைத்து, அந்தத் தீர்வுத் திட்டத்தை நோக்கி எமது மக்களின் ஆதரவுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

ஆனால், இந்த அரசு பல அதிகார அலகுகளாகப் பிளவுபட்டுப் போய்க் கிடக்கிறது. ஒன்று - ஜனாதிபதி ஆட்சிமுறை. மற்றையது - நாடாளுமன்ற ஆட்சிமுறை. இதில் ரணிலின் அரசு நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத, முழு ஆட்சி அதிகாரம் இல்லாத ஓர் அரசு. என்றாலும் அவர்கள் எம்முடன் பேச வந்திருக்கிறார்கள். நாமும் அவர்களுடன் பேசுகிறோம். ஆனால், அவர்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியுமா என்பது கேள்விக்குறி.

ரணிலின் அரசு அமெரிக்காவுக்கு பின்னாலிருக்கிறது, ஜப்பானுக்குப் பின்னாலிருக்கிறது, மேற்குலக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குப் பின்னாலிருக்கிறது. ரணிலின் அரசு சமாதான முயற்சிகளைப் பின்பற்றவேண்டிய தேவை உண்டு. ஏனெனில், அப்படியான அழுத்தம் ஒன்றை சர்வதேச சமூகம் ரணிலின் அரசின் மீது கொடுத்துவருகிறது.

"நீங்கள் புலிகளோடு போராடி வெல்ல முடியாது. புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது. ஆகவே, புலிகளோடு பேசுங்கள். அதன் மூலம் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்குங்கள்" - என்று கூறி சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த அழுத்தம் காரணமாக அரசும் பேச்சு நடத்திவருகிறது.

(மிகுதி நாளை)


## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்வதற்கு க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த பெண்பிள்ளைகளும், கணனி அறிவுள்ள பெண்பிள்ளைகளும் தேவை.

சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

இல. 9, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (16565)

## தேவை

நன்கு சிங்களம் தெரிந்த, முன்னனுபவமுள்ள சிட்டை லிகிதர் தேவை.

தொடர்புகொள்ளவும:
இல.9, ஐயனார் கோவிலடி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (16556)

## கைத்தொலைபேசி தவறிவிட்டது!

கைதடி வடக்கைச் சேர்ந்த 61-4986 மினிபஸ்சின் உரிமையாளர் நடராசா பார்த்திபனுடைய கைத் தொலைபேசி, யாழ்ப்பாணம்- முகமாலை சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள், சாவகச்சேரி தனியார் சிற்றூர்தி சேவை சங்கத்தில ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (16566)

## [illegible] கல்வி நிலையம்

நெல்லியடி

O/L DAY CLASS

தமிழ் : முரளி
கணி. : இராமகிருஷ்ணா
: சிவராஜா
விஞ்ஞா. : திரவியநாதன்
: ரவீந்திரன்
சமூகம். : செந்தூரன்
ஆங்கி. : பரராஜசிங்கம்
சமயம் : நவம்
வர்த்த. : சிவபாலன்

ஆரம்பம்:
09.04.2003 புதன் இன்று
காலை 8.30 (பு.நே.)
விஞ்ஞானம் (16516)






- வெஸ்டன் யூனியன்மூலம் பணம் பெறும் அனைவருக்கும் மார்ச் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து விசேட புத்தாண்டு பரிசுகள் காத்திருக்கின்றன.
- இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
- இந்த பண்டிகை காலத்தில் வெஸ்டன் யூனியன்மூலம் பணத்தை அனுப்பி வெஸ்டன் யூனியனின் சர்வதேச கோலிங் காட்டுகளையும் அழகான குடைகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுமாறு உங்கள்அன்புக்குரியவர்களிடம் அறிவிக்கவும்
- ரூ.75,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அனைவருக்கும் இந்த வெகுமதிகள் கிடைக்கும்.

விரையுங்கள்!
இருப்பு இருக்கும்வரையே
இந்த சலுகை

ஹொட்லைன்: 452666

WESTERN UNION பணப் பரிமாற்றம்

மக்கள் வங்கி

செலான் வங்கி
தலைமை அலுவலகம்:
செலிங்கோ செலான் டவர்ஸ்,
இல. 90, காலி வீதி, கொழும்பு 3

HOLMES POLLARD & STOTT

இது உங்கள் குழந்தையின் எதிர்காலம் பற்றியது!
**Baby.Com**

ஆம்!
இம்முறை மேலும் பல சிறப்பான திட்டங்களுடன் உங்கள் குழந்தைகளுக்கான எமது ஆய்வு கூடம்

அடிப்படைக் கணனிப் பிரயோகத்துடன்
சிறுவர்களுக்கான
கார்ட்டூன் CDக்கள்
ஆங்கிலப் பாடல் CDக்கள்
Games CDக்கள்
ஆரம்பம் : 12.04.2003

எங்கள் நவீன கணனிக் கூடத்தில் உங்கள் குழந்தையை இணைப்பதனூடாக ஒரு பொறுப்புள்ள அம்மாவாகுங்கள்.

பதிவுகளிற்கு
*STP Computer world (Pvt.)Limited.*
*Kantharmadam, Jaffna.*



யாழ். மாவட்ட மாணவர்களுக்கு
சர்வதேச ரீதியிலான
வங்கியியல் கற்கைநெறிகள்
**B.Sc.(Hons) Degree & ACIB**
**DBF, ACBF, CBF (CIB/IBSL)**
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 19.04.2003
விண்ணப்ப முடிவு திகதி : 10.04.2003
*The Best*
**External Degree Studies**
*(Jaffna University & Peradeniya University)*
G.A.Q. | 1st in Com. | B.A. | B. Com.
2003 / 2004 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05.04.2003
**CIMA**
*Foundation level & Intermediate Level*
Further Details
**Director**
Jaffna College Undergraduate Dept.
*464, Hospital Road,*
*Jaffna.*
(C/27233)



**BARATHY**
சித்தன்கேணி
சமயோசிதமான ஆசிரியர் குழுவே உங்களை மீட்சிக்குரியவராக்கும்
**A/L 2005**
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்- 10.04.2003
புதன் - 4.00 p.m.
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர்
பொருளியல்:- மகேந்திரன்
வணிகக் கல்வி:- பசில்
கணக்கீடு:- முகுந்தன்
அளவையியல்:- R.P.சர்மா
தமிழ்:- பாலா
இந்துநாகரிகம்:- சுரேஸ்
இந்துசமயம்:- தரன்
புவியியல்:- குமரன்
அரசியல்:- றஜீவன்
நாடக அரங்கியல்:-சுதன்
வரலாறு:- சுதன்
கிறிஸ்தவம்:- வசந்தன்
குறிப்பு: மேலே குறிப்பிட்ட யாழ். ஆசிரியர் குழுவினர் சித்தன்கேணியில் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிப்பார்கள். (16510)



**BEACON** யாழ்.நகர்
**A/L 2005**
கலை/வர்த்தகம் புதிய பிரிவு
கலைப் பிரிவு
LOGI. S.S.மனோகரன்
TAM. நாக.தமிழிந்திரன்
H.C. ஹீல்
CRI. துவாரகா
GEO. S.R.பாலா
வர்த்தகப் பிரிவு
ACC. பாலவாசன்
ECO. மோகன்
COM. யசோ
DRAMA. J.சுதன்
I.Q. தவசேகர்
ஆரம்பம் - 12.04.2003
சனிக்கிழமை 8.00 a.m.
(16505)



**விக்னா கல்வி நிறுவனம்**
A/L 2005
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் : 12.04.2003 (8 மணி)
எமது வழமையான ஆசிரியர் குழாம்.

| | | | |
|---|---|---|---|
| ACC. | திரு.பாலவாசன் | H/C. | திரு.பத்மராஜா |
| ECO. | திரு.விக்கி | GEO. | திரு.பாபு |
| | திரு.நந்தீஸ் | HIN. | திரு.N.T. தரன் |
| COM. | திரு.யசோ | HIST. | திரு.சுதன் |
| LOG. | திரு.சயந்தன் | GOVER. | திரு.ஸ்ரீரங்கநாத் |
| TAM. | திரு.குழந்தை - பகுதி I | CHRI. | திரு.வசந்தன் |
| | திரு.லிங்கம் - பகுதி II | DRAMA | திரு.மதி |

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (C/27205)



**பொருளியற் கல்லூரி**
(இரு இடங்களில்)
**A/L 2005**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் 12.04.2003
யாழ்.நகரில்
கலைப் பிரிவு - 9.00 a.m.
வர்த்தகப் பிரிவு - 10.00 a.m.
இணுவிலில்
கலைப் பிரிவு - 2.00 p.m.
வர்த்தகப் பிரிவு - 3.00 p.m.
(C-27243)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி வா.கமலேஸ்வரி (சாந்தி) அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி வாரித்தம்பி வள்ளிநாயகி

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியுள்ள அவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம். (16561)


**போஸ்ரர்கள் விற்பனைக்கு**
விஜய், மீராஜஸ்மின் நடிப்பில்
**கீதை**
மற்றும் பல புதிய போஸ்ரர்கள் விற்பனையாகின்றன.
வீடியோ சிந்து
உரும்பிராய் சந்தி. (16574)



**ராஜா** யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், பூமிகா,
விவேக், ராதிகா
**ரோஜாக்கூட்டம்**
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இருக்கும்.



**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ஸ்நேகா, நாசர் நடித்த
**வசீகரா**
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
(16540)


## மரண அறிவித்தல்

### திருமதி கணேசஐயர் கோமதிஅம்மா

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி கணேசஐயர் கோமதிஅம்மா நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (16569)
தகவல்:
வீரமணிஐயர் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

*(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்)*

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (08.04.2003) செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,*
*மிருசுவில்.* (16557)
தகவல்:
சுரேஸ்குமார் (மகன் J.T.I.)
பரம்தில்லைராஜன் (மருமகன்)

### திருமதி இராசநாயகி பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசநாயகி பாலசிங்கம் (ஓய்வுபெற்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை, வட்டு.இந்துக் கல்லூரி, சித்தன்கேணி) 28.03.2003 நோர்வேயில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற அஞ்சல் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மாவின் அருமை மகளும் சுழிபுரத்தைச் சேர்ந்த செல்லப்பா தம்பதிகளின் அருமை மருமகளும் டாக்டர் இளங்கோ (நோர்வே), பார்த்தீபன் (நோர்வே), வாசுகி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் சீதாலட்சுமியின் (நோர்வே) அன்பு மாமியும் கமலநாதன், காலஞ்சென்றவர்களான டாக்டர் ஸ்ரீபத்மநாதன், செல்வநாதன், நளினிகணநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2003) புதன்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்தன்கேணி* (16563)
தகவல்:
ஆ.கமலநாதன்
(சகோதரன்)

### சிற்றம்பலம் கனகசபை

*(இளைப்பாறிய இலிகிதர், யாழ்.கச்சேரி)*

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் கனகசபை அவர்கள் நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, வீமன்காமம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லோஜனராணி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜன் (பிரதேச சபை, சுன்னாகம்), மனோகரராஜன் (ஆஸ்திரேலியா), கலாராணி (ஆசிரியர், நவாலி மகாவித்தியாலயம்), வில்வராஜன் (வெளிவாரி மாணவன், பேராதனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுலோஜனா (ஆசிரியை, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), கலாரஜனி (ஆஸ்திரேலியா), இரவீந்திரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), சிவனேஸ்வரி (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலினி, கஜந்தினி, சர்வக்சன், கஜாலினி, நிகிதன், மயூரன், காயத்திரி, கீர்த்தனா, தர்சனா, அர்ச்சுனா, எழிலன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வடலித்தோட்டம்,*
*மானிப்பாய்.* (16571)
தகவல்:
க.ஸ்ரீஸ்கந்தராஜன் (மகன்)

### வல்லிபுரம் சுப்பிரமணியம் கனகரத்தினம்

*(முன்னாள் உதவி அரசாங்க அதிபர் பூநகரி)*

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்கான திருநாவுக்கரசு - மாணிக்கம் தம்பதிகளின் மருமகனும் ஜெயஸ்ரீ (லண்டன்), இரட்ணஸ்ரீ (அமெரிக்கா), ஸ்ரீசசிக்கலா (கனடா), வாணிஸ்ரீ (கொலண்ட்), ஸ்ரீபவானி (கனடா), ஸ்ரீகஜேந்திரகுமாரகுருபரன் (அமெரிக்கா), ஸ்ரீகலைச்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயகுமார் (லண்டன்), மோகன் (அமெரிக்கா), சௌந்தரராஜினி (கனடா), உதயகுமார் (கொலண்ட்), மதிவண்ணன் (கனடா), சிவசுதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசாமி (இளைப்பாறிய கட்டட மேற்பார்வையாளர்), பராசக்தி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பாக்கியலட்சுமி மற்றும் குலசிங்கம் (இலங்கை வங்கி மேற்தரக்... யாழ்ப்பாணம்), மல்லிகாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் ப... சகோதரரும் நடராசா, புஸ்பராணி காலஞ்சென்றவர்களான கனகசபை, தவமலர் மற்றும் செல்வராணி, கருணாநிதி (ஜேர்மனி), காலஞ்சென் நடராசா மற்றும் சச்சிதானந்தம், பத்மநாதன், விஜயமலர், பஞ்சாட்சரதே... ஆகியோரின் மைத்துனரும் முருகையா காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*73/1, கலட்டி அம்மன் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (16553)
தகவல்:
V.S.குமாரசாமி, V.S.குலசிங்கம்
(சகோதரர்கள்)

### திருமதி கதிரவேலு பார்வதிப்பிள்ளை

*(காரைநகர்)*

காரைநகர், மடத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 463, கே.கே.எஸ். வீதியில் வசித்தவருமான திருமதி கதிரவேலு பார்வதிப்பிள்ளை நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காரைநகரில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சி.க.ஆ.கதிரவேலுவின் அன்பு மனைவியும் கமலாதேவி, உமாதேவி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி, சண்முகரத்தினம் (லங்கா எரிபொருள் நிலையம், காரைநகர்), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சச்சிதானந்தம் காலஞ்சென்ற சதானந்தலிங்கம் மற்றும் கமலாம்பிகை, குமாரவேலு (உப அதிபர், கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), தேவகலா, கிருஸ்ணகுமார் (ஜெயகிருஸ்ணா, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாந்தரூபன், உமாசுதன், சுரேஸ்குமார், கௌரிசங்கர், மீரா, யசோதை, ரமேஸ்குமார், கிரிசாந்தன், ஜனரஞ்சனி, மோகனரஞ்சன், ஜனார்த்தனன், கோசலா, மாதவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (நேற்று (08.04.2003) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பின்னர் சாம்பலோடை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சம்பந்தர் கண்டி,*
*காரைநகர்.* (16562)
தகவல்:
க.சண்முகரத்தினம் (மகன்)

## காசோலை வழங்குதல்

யாழ்ப்பாணம்,ஏப்.9

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் கடந்த 6 ஆம் திகதி வழங்கப்பட்ட காசோலைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறிய ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-6)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கு தமிழ்த்தின போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

தமிழ், நடனம், சங்கீதம், நாடகம் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-6)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் புற்று நோயாளர் சிகிச்சைக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கு அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பை வழங்கும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் காலை 9 மணிக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

# திருமலையில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

அரசின் இந்த முறைப்பாட்டை புலிகளின் பிரதிநிதிகள் முற்றாக மறுத்து நிராகரித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு போராளிகள் மருந்து மற்றும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வது வழமை. ஆனால், கடந்த சில வாரங்களாக அந்தப் பொருள்களை எடுத்துச் செல்ல படையினர் தடை விதித்துள்ளனர் என்று புலிகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறையிட்டனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி மூதூரில் சூனியப் பிரதேசத்தில் படையினர் - விடுதலைப் புலிகள் பங்குபற்றும் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து இந்த விடயம் குறித்து ஆராயலாம் என்று கண்காணிப்புக்குழுத் தலைவர் அப்போது தெரிவித்தார்.

அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இரவில் நடமாடுவதைத் தவிர்ப்பது நல்லது என்றும் -

எதிர்வரும் 21ஆம் திகதி நடக்கும் கூட்டத்தில் இது விடயம் குறித்து ஆராய்ந்து திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தலாம் என்றும் - கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க சம்பூரில் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இரு சிங்களவர்களும் இரு முஸ்லிம்களும் கடத்தப்பட்டுள்ளமை தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவர், புலிகள் பிரதிநிதிகளிடம் பிரஸ்தாபித்தார்.

இந்தக் கடத்தல் சம்பவத்துக்கும் தமது அமைப்புக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று மறுத்த புலிகளின் பிரதிநிதிகள் சமாதானத்தை குழப்பும் சக்திகளே இக்கடத்தலின் பின்னணியில் இருப்பதாகத் தெரிவித்தனர்.

(ஐ-3)

# கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றை வெளியிடவைத்துள்ளன என்றும் ஜனாதிபதி, கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள அந்த விடயங்கள் வருமாறு:-

1) புலிகளோ, இலங்கை அரசோ இந்தத் தாக்குதலை நடத்தவில்லை என்வும் ஆனால், கடலில் இயங்கும் சில ஆயுதம் தாங்கிய சக்திகளே அதனைச் செய்திருக்க வேண்டும் எனவும் கண்காணிப்புக்குழு முடிவுக்கு வந்திருப்பது பட்டவர்த்தனமாக அதிர்ச்சியைத் தந்துள்ளது.

2) சாட்சியங்கள் ஏதுமின்றி ஆயுதம் தாங்கிய ஏனைய தமிழக் குழுக்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு விரலை நீட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

3) இலங்கைக் கடலில் பல நூற்றாண்டு காலமாக எந்தக் கிரிமினல் சக்திகளோ கடற்கொள்ளையர்களோ செயறப்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை.

4) இலங்கைக் கடலில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்காக அரசும் புலிகளும் கடலைக் கண்காணிக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழு சிபாரிசு செய்திருப்பது சட்டத்தைப் பற்றி சிறிதளவு அறிவுள்ள எவரையும் கூட திடுக்கிடவைப்பதாக இருக்கும்.

குறிப்பாக இலங்கை அரசை - இந்த விடயத்தில் இலங்கைக் கடற்படையை - எந்த இராணுவ நடவடிக்கையிலும் புலிகளுக்கு சமனான ஜோடியாகக் கருதும் விதத்தில் கண்காணிப்புக்குழு சிபாரிசு செய்திருப்பது விடுதலைப் புலிகள் இயக்கம் இறைமையுள்ள தனிநாடு ஒன்றை ஸ்தாபித்திருப்பது போன்ற நிலையைத் தருகின்றது.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

சமாதான நடவடிக்கைகளுக்கு கண்காணிப்புக் குழு வழங்கிவரும் பங்களிப்புக்கு தமது கடிதத்தில் ஜனாதிபதி நன்றியும் தெரிவித்திருக்கின்றார். (ஐ-3)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எம்.வி.என். நவரத்தினத்தின் பாட்டும் திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் காவடி நடனமும் அனைவரையும் கவர்ந்தன.

பேராசிரியர் எதிர்விர சரத்சந்திரவின் 'மனமே' நாடகம் இறுதி நிகழ்வாக இடம்பெற்றது.

எம்.ஐ.ஏ.ஜபாரின் தலைமையுரையும் இளையதம்பி தயானந்தாவின் கருத்துரையும் இடம்பெற்றன.

நேற்றைய நிகழ்வில் உயர் மட்ட போராளிகள், பொறுப்பு வாய்ந்தவர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள், கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மற்றும் பல அதிதிகள் கலந்துகொண்டனர். (ஐ-6-290)

## போர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமை, சமாதானம், சமத்துவம் பெற்று வாழ வேண்டும் என்பதே தலைவர் பிரபாகரனின் எண்ணமும் விருப்பமும் கூட. அவரது நீண்டகால எண்ணம் இன்று ஓரளவு நிறைவேறி வருவது கண்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

இனவாத இடுக்குப்பிடி அடக்குமுறைகள் இவற்றினால்தான் தமிழினம் போராட எழுந்தது. அந்த இரத்த ஆற்றினால் இன்று மக்கள் செழிப்புடன் வாழும்நிலை ஏற்பட்டிருக்கிறது. எமது தலைமையின் திடம், உறுதி, தீர்க்கதரிசனம், உணர்வு என்பவற்றின் பிணைப்பினாலேயே இன்று இந்த சமாதான சூழலை சந்திக்க முடிந்திருக்கிறது - என்றார் இளம்பரிதி.

## படைத்தளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சருடன் பேச்சு நடத்தியிருந்தனர். உயர் மட்டக்குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி இந்த விவகாரம் குறித்து நேரில் ஆராய அந்தப் பேச்சில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதன்படி இராணுவத்தளபதி லெப்டினன்ட் கேணல் லயனல் பலகல்ல, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்த ஆகியோர் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இவர்களுடன் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன், மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் வருகின்றனர். அவர்களுடன் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள ஜி.ஜி.கஜேந்திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், என். ரவிராஜ் ஆகியோரும் இணைந்து கொள்வர்.

இக்குழுவினரின் விஜயம் தொடர்பாக நிகழ்ச்சி தயாரிக்கப்படாத போதும், பொதுமக்கள் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்திக்கவிருக்கின்றனர்.இன்று காலை 7.00 மணிக்கு குழுவினர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்படுவர். (ஐ-3)


SALE, SALE, SALE, SALE,
விற்றுத் தீர்த்தல்
சகல வகை புடைவைகள் அனைத்தும்
50 வீத கழிவில் விற்பனை செய்யப்படுகிறது.
உடன் விரையுங்கள்.
மாருதி ரெக்ஸ்
இல.1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C-27711) (கையிருப்பு சொற்ப அளவு மட்டுமே)

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி அவர்கள்.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 9மணிமுதல் மாலை 8மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (16413)

SUBRA (14)
சித்தன்கேணி
A/L
2005
கலை, வர்த்தக, கணித,
விஞ்ஞான பிரிவு II
இன்று ஆரம்பம்
09.04.2003 காலை 10.00
★ எமது தரம் நிரந்தரம்.
கல்வி உலகின்
முன்னோடி நிறுவனம்
SUBRA
(C-27230)

SUBRA (14)
சித்தன்கேணி
தரம் 5
புலமைப்பரிசில்
திரு.கைலைநாதன்
புதிய பிரிவு
Sat, Sun 6 p.m. 8p.m.
★ அமைதிகள் வரையறுக்கப்பட்டவை
★ வாரந்தோறும் பயிற்சிப் பரீட்சை
★ கடந்த வருடம் 100% சித்தி
★ வலிமேற்கில் தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம். (C/27229)


# மரண அறிவித்தல்கள்

## நாகேசு சின்னத்துரை கந்தசாமி J.P.

(இளைப்பாறிய உப அதிபர், வட்டு.இந்துக் கல்லூரி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான N.S.கந்தசாமி நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதிகளின் ஏகபுத்திரனும், இராசமணியின் அன்புக் கணவரும் சந்திரிகா (பல் வைத்தியர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் ஞானேஸ்வரன் (பொறியியலாளர்) அவர்களின் அன்பு மாமனாரும், சாம்பவியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு, அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தெல்லிப்பழை வீதி,
மாவடிச் சந்தி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (C/27241)

தகவல்:
இராசமணி (மனைவி)
திரு திருமதி ஞானேஸ்வரன்
மருமகன், மகள்

## திருமதி மகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

04.04.2003 வெள்ளிக்கிழமை காலமான அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.இரகுதேவன் (மகன்).
கொக்குவில். (16558) திருமதி தி.புவனேஸ்வரி (மருமகள்)

## திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளை

(சங்கரத்தை, வட்டுக்கோட்டை)

சங்கரத்தை பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளை நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா வேலுப்பிள்ளை (Rtd. Boarding Master Manipay H.C.) அவர்களின் அன்பு மனைவியும் சத்தியசலன், புனிதசீலன், காலஞ்சென்ற நித்தியானந்தசீலன், மற்றும் இந்திரசீலன், சந்தானலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சரஸ்வதிதேவி, இரத்தினேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (முன்னாள் மின்னியல் மேற்பார்வையாளர்), இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோமளேஸ்வரன், பிருந்தாபனன், சசிதா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2003) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (C-27242)

தகவல்
வே.புனிதசீலன் (மகன்)

## மரண அறிவித்தல்

திருமதி

இளையகுட்டி சரஸ்வதி

தோப்பு, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சரஸ்வதி அவர்கள் நேற்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
க.லோகநாயகம் (மகன்)
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
(ஸ்ரீராம் நெசவுசாலை ஒழுங்கை),
கோப்பாய் தெற்கு. (16575)


Z to Infinity IT Academy இன்
புதிய கற்கைநெறிகள் ஆரம்பம்
14.04.2003 (நண்பகல் 12.05 - ப.பி.)
(A) இளைஞர்கள், யுவதிகளின் வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்டு தொழில்சார் கற்கைநெறிகள்

| கற்கைநெறியின் பெயர் | காலம் (மாதம்) |
|---|---|
| ($a_1$) Diploma in Video Mixing | 4 |
| ($a_2$) Diploma in Audio Mixing | 3 |
| ($a_3$) Diploma in Type Setting | 4 |
| ($a_4$) Photoshop | 3 |

(B) மாணவர்களின் கணனி பற்றிய அறிவை மேம்படுத்த அறிவுசார் கற்கைநெறிகள்

| கற்கைநெறியின் பெயர் | காலம் (மாதம்) |
|---|---|
| ($b_1$) Diploma in Office Management | 4 |
| ($b_2$) Diploma in Information Technology | 4 |
| ($b_3$) Diploma in Computer Language | 5 |

★ கற்கைநெறி B இற்குத் தேவையான ஆகக்குறைந்த கல்வித்தகைமை க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையில் ஆங்கிலம் உட்பட குறைந்தது 6 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
(C) ஆங்கில ஆர்வலர்களுக்கு இலவச பேச்சு ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்படும். கணித, சதுரங்க (Chess) நாட்டமுள்ளவர்களுக்கு எம்மால் இயன்ற சேவை செய்யச் சித்தமாயுள்ளோம்.
பிற்குறிப்பு: அதி திறமையான மாணவர்களுக்கு இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
"மெய்ப்பொருள் காண்க" புலமைப் பரிசில் போட்டியின் எமது கருப்பொருளுக்கு அண்மித்த பொருளை எழுதி அனுப்பிய சித்திரமேழி இளவாலை என்ற முகவரியைச் சேர்ந்த சுதாமதி சண்முகநாதன் என்பவருக்கு எமது நிறுவனம் 50% புலமைப் பரிசிலினை வழங்குகின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
கையடக்கத் தொலைபேசி இல: 6777-148945
இல.7 1/4, புதிய நவீன சந்தை, மேல்மாடி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. (16541)
மின்னஞ்சல் முகவரி: zifa2631@hotmail.com.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.
O/L DAY CLASS
ஆரம்பம்: 09.04.2003
இன்று காலை 8.30
"SUPER GRADE"
ஆசிரியர் குழு
(16568)

விசேட கருத்தரங்கு
Logic
NEW SCIENCE COLLEGE
OR
NEW SCIENCE HALL
(கன்னாதிட்டி - யாழ்நகர்)
காலம் : நாளை 10.04.2003
நேரம்: 9.00
By: S.R.J.சுதன், P.கமல்
Note: வினாத் தொகுப்புகள் வழங்கப்படும்.
(16497)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஏப்ரலுக்குள் போரை முடித்தால் பிழைத்துக்கொள்ளும் அமெரிக்கா

கடந்த மாதம் 20... ஆம் திகதி ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளின் விமானங்கள் குண்டுவீசத் தொடங்கியுள்ளதாக செய்தி பரவியதும் 'சதாமின் ஆட்டம்



குளோஸ். ஓரிரு நாள்கள் அல்லது ஆகக்கூடியது ஒரு வாரம் அதற்குள் ஈராக்கை அமெரிக்கா தன்வசம கொண்டுவரும்' இப்படித்தான் நினைத்தது உலகம்.

(நம்மவர்கள் அந்த நினைப்பில் தான் மண்ணெண்ணைக்கு முண்டியடிப்பதைக்கூட நிறுத்தினார்கள்)

ஏன்... அமெரிக்காகூட அப்படித்தான் ஆகுமென்று எண்ணியிருந்தது. அதனால்தான் நண்டகாலப் போர்த்திட்டம் ஏதுமின்றி அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் ஈராக்குக்குள் பெரும் மிதப்புடன் நுழைந்தன.

போர் தொடங்கிய ஒரு வாரத்துக்குள் உணவும் எரிபொருளும் தேவை என்று ஈராக்கிலிருந்த அமெரிக்கப்படைகள் கேட்டதும் -

மீண்டும் ஏராளமான துருப்புகள் ஈராக்குக்கு அனுப்பப்பட்டதும் -

இவற்றைவிட சில தினங்கள் தரை நகர்வுகளை நிறுத்திவைக்க நேர்ந்ததும் -

அமெரிக்கா எண்ணியதற்கு மாறாக யுத்தம் நீண்டுகொண்டு சென்றதன் எதிரொலிகளே.

சொல்லப்போனால் 'ஆனானப்பட்ட' சர்வதேச ஊடகங்கள்கூட போர் இத்தனை நாள்கள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. போர்க் காட்சிகளை படம் பிடிக்கப்போனவர்கள் "கமராவில் 'பிலிம்' முடிஞ்சு போச்சு, இன்னும் அனுப்புங்கள்" என்று தமது அலுவலகங்களுக்கு தகவல் அனுப்புகிறார்கள் என்றால் நிலைமையைப் புரிந்துகொள்ளுங்கள்.

போர் நடைபெறும் காலத்தில் மட்டுமில்லை; வேறு விஷயங்களிலும் அமெரிக்காவின் எண்ணத்தில் மண் தான்.

பக்தாத்தின் ஒரு 'பதுக்கல் மாளிகை'யில்தான் சதாம் தங்கியிருப்பதாக அமெரிக்காவின் உளவு நிறுவனம் சீ.ஐ.ஏ. தமது அதிபர் புஷ்ஷின் காதில் போட்டு வைத்தது. இதை நம்பித்தான் போர் தொடங்குவதற்கு அச்சாரமாக - சிஐஏ.குறிப்பிட்ட - அந்த மாளிகைமீது கூட்டுப்படை விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தன.

ஆனால், அங்கு சதாம் இல்லை என்று தெரியவந்தபோது சி.ஐ.ஏ. கோட்டை விட்ட சங்கதி அம்பலமானது.

முதன் முதலில் சதாம்மீது வைத்த குறி தப்பியது. முதற் கோணலைப் பொருட்படுத்தாமல் கூட்டுப்படைகள் ஈராக் எல்லைக்குள் நுழைந்தன. எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெறும் பாலைவன மணலாகவே தெரிந்தது. கூட்டுப்படை வீரர்களுக்கு 'குஷியோ குஷி' எந்தத் தடையுமின்றி இரவுபகலாக அவர்கள் தொடர்ந்து முன்னேறினார்கள். ஆனால், ஈராக்கின் முக்கிய நகரங்களை நெருங்கியபோதுதான் தலைவலி தொடங்கியது.

இந்த விடயத்தில் அமெரிக்கா தனது குள்ளநரித்தனத்தைக் காட்டிவிட்டதாக பிரிட்டனில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. முதலில் எதிர்ப்பட்ட பிரதான நகரங்களான உம்குசார், பஸ்ரா ஆகியவற்றைப் பிடிக்கப்போனவை பிரிட்டிஷ் படைகளே. போர் தொடங்கி 20 நாள்கள் ஆகியும் அந்த இரு நகரங்களையும் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாமல் 'ஆப்பிழுத்த குரங்காக' அவதிப்படுகிறது பிரிட்டிஷ் படை. ஆனால், பாலைவனம் ஊடாக பக்தாத்தைத் தொட்டுவிட்டது அமெரிக்கப்படை.

## பாமரன்

இந்நிலையில், போர் ஒரு முடிவுக்கு வந்தால் அமெரிக்கப் படைகளுக்கே அதிக பெயர் கிடைக்கும். போதாக் குறைக்கு பிரிட்டிஷ் படையினரும், பி.பி.ஸி. செய்தியாளரும் பயணித்த வாகனங்கள் மீது அமெரிக்க விமானங்கள் தவறுதலாகக் குண்டுகளைப் போட்டுத் தொலைத்தன. இதில் சுமார் 50 பேர் கதை முடிந்தது. இது வேறு, பிரிட்டிஷாருக்கு கடுப்பைக் கிளப்பியுள்ளது. ஆனால் பாவம்... அவர்களால் என்ன செய்ய முடியும்... பொருமுவதைத்தவிர.

பிரிட்டிஷாரின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டிக்கொண்ட அமெரிக்காவுக்கு மட்டும் சிக்கலில்லையா? இருக்கிறது. இது இதுவரை இருந்திராத சிக்கல். அது 'அல் ஜெஸீரா' என்ற வடிவத்தில் வந்துள்ளது. ஆம், 'பின்லேடன புகழ்' அல்-ஜெஸீரா தொலைக்காட்சிச சேவைதான் அது.

'நாங்கள் அந்த நகரைப் பிடித்துவிட்டோம், இந்தத் தளபதியைக் கொன்றுவிட்டோம், ஈராக் மக்கள் எங்களுடன் கொஞ்சிக் குலாவுகிறார்கள்' இப்படியெல்லாம் அமெரிக்க, பிரிட்டன் சார்ந்த செய்தி நிறுவனங்கள் கூறி வந்தன.

ஆனால் ஈராக்கைச் சார்ந்த 'அல் - ஜெஸீரா' தொலைக்காட்சி 'இது எல்லாம் அண்டப் புளுகு' என்பதை அம்பலப்படுத்தியது. கூட்டுப்படைகள் சொல்வதற்கும் உண்மை நிலைக்கும் சம்பந்தமில்லை என்பதை அல் ஜெஸீரா ஆதாரங்களுடன் ஒளிபரப்பியது.

இதுவரை அமெரிக்கா பல போர்



களை நடத்தியிருக்கின்றது. ஆனால், அமெரிக்கா சார்ந்த செய்தி நிறுவனங்கள் எதிர்த்தரப்பின் செய்தி பரப்பும வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல திணறுவது இதுவே முதன்முறை என்று கூறப்படுகிறது.

இதெல்லாவற்றையும்விட, அமெரிக்காவை அட்டமத்துச் சனியாக வாட்டிவதைப்பது ஈராக்கின் தட்பவெப்பநிலை.

கடந்த டிசெம்பர் மாதத்தில் ஈராக் மீது தாக்குதல் நடத்தவே அமெரிக்கா முதலில் திட்டமிட்டிருந்தது.

அதைக்குழப்பியடித்த புண்ணியத்தை ஐநா.கட்டிக்கொண்டது வேறு விடயம். திட்டமிட்டபடி டிசெம்பரில் போர் தொடங்கியிருந்தால் அமெரிக்காவின் விருப்பப்படியே ஒரு வார காலத்துக்குள் போர் முடிவுக்கு வந்திருக்கும். ஆனால், மார்ச் மாதக் கடைசியில் அல்லவா ஈராக்கில் கால் வைத்துள்ளன கூட்டுப்படைகள்?

ஏப்ரல் தொடக்கம் ஓகஸ்ட், செப்ரெம்பர் வரை ஈராக்கிலும் அதன் அயல் நாடுகளிலும் கிட்டத்தட்ட 45 முதல் 48 பாகை செல்ஸியஸ்வரை வெயில இருக்கும். அதற்கென்ன என்கிறீர்களா? நமதூரில் வெயில் மிஞ்சிமிஞ்சிப் பார்த்தாலும் 32 பாகை செல்சியஸ்தான். இதற்கே இங்கு பொறி கலங்குகிறது. அப்படியிருக்க 48 பாகை செல்ஸியஸ்ஸில் கல்லும் உருகி ஓடாதோ?

இத்தோடு கூட்டுப்படைவீரர்கள் இரசாயனக் குண்டுத் தாக்குதலிருந்து தம்மைப் பாதுகாக்க கவச உடைகளை அணிந்திருக்கிறார்கள். கவசமென்றால கவசம்; தலைமுதல் காலவரை மூடியிருக்கும் கவச உடை. சாதாரணமாக அதை அணிந்திருந்தாலே வியர்வையில் குளிக்கவேண்டும். இதில் ஈராக் வெயிலும் சேர்ந்தால் தாக்கும் வெப்பத்தின் அளவு 50 முதல் 53 பாகை செல்ஸியஸ்ஸுக்கு எகிறிவிடும்.

அந்தநிலையில் போரிடும் உடல் மற்றும் மன வலிமைகள் கூட்டுப்படை வீரர்களிடம் பாதிப்படையும். அப்படி ஏற்பட்டால் புஷ்ஷின் கனவு புஷ்வாணம் ஆகிவிடும்.

இப்படி வெயிலின் கொடுமையில சிக்கித் தவிக்கும் அமெரிக்கப் படையினரை தூக்கமின்றித் தவிக்கவைப்பது தற்கொலைப்படைத் தாக்குதல்கள்.

கார் ஒன்றில் வெடிமருந்துகளை நிரப்பிக்கொண்டு மோதி ஈராக் வீரர் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதல்தான் இம்முறை பிள்ளையார் சுழி. அதிலிருந்து 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற கணக்கில் கதிகலங்கிப் போயிருக்கிறது கூட்டுப்படை.

சமீபத்தில் பஸ் ஒன்றை நிறுத்தச சொன்னார்கள் கூட்டுப்படை வீரர்கள். பஸ் சாரதிக்கு கெட்ட நேரமோ என்னவோ? அதனைக் கவனியாது பஸ்ஸை செலுத்தியிருக்கிறார் அவ வளதான் பஸ்ஸில் யார் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கூட்டுப்படையினர் படபடவென்று சுட்டுத்தள்ளினார்கள்.

விளைவு... பஸ்ஸிலிருந்த பெண்க



ளும் சிறுவர்களும் பலியாகினர். வெயிலால் ஏற்பட்ட 'ரென்ஷன்' தற்கொலைத் தாக்குதலால் ஏற்பட்ட கிலி இரண்டும் சேர்ந்துதான் இப்படி கண்மூடித்தனமாகச் சுட்டுத்தள்ள வைக்கிறது.

ஈராக்கை வெற்றிகொள்ள தம்மிடமுள்ள மிக நுண்ணிய உணர்கருவிகளையே (SUPER SENCITIVE) அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் பெரிதும் நம்பியுள்ளனர். இந்த நம்பிக்கையிலும் மண் விழுந்துவிட்டது. ஆம், உண்மையிலேயே மண்தான் காரணம் மணற்புயல். இந்த மணற்புயல் புதிது புதிதாக மணல் மேடுகளை உருவாக்கி பாதைகளை மூடும் மண்ணை விசிறியடிக்கும் மணற்புயல், கோடை வெயில் ஆகியவற்றை மீறி நுண்ணிய உணரிகளைக் கொண்ட போர்க் கருவிகள் செயற்படவேண்டி உள்ளது. இதனால் வைத்தகுறி தவறாமல் தாக்குமா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

ஈராக்கில் ஏப்ரல் மூன்றாவது வாரமளவில் இருந்து ஓகஸ்ட், செப்ரெம்பர் வரை மணற்புயலும், கோடை வெயிலும் கூட்டுப்படையினரை வாட்டி எடுத்துவிடும். ஆகவே, பக்தாத்தைச சுற்றிவளைத்துவிட்ட கூட்டுப்படையினர் இன்னும் இரு வாரங்களில் போரை முடித்துக்கொண்டால் பிழைத்துக்கொள்வார்கள். இல்லையென்றால் ஓகஸ்ட் வரை மட்டுமில்லை, ஒக்ரோபர் வரை கூட நீடிக்கக்கூடிய கடும் கோடை மற்றும் மணற்புயல் கூட்டுப்படையினருக்கு கேடுகளை விளைவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படி ஒரு நிலை உருவானால் சதாமின் விருப்பப்படி, அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புக்கள் ஈராக்கியப் பாலைவனத்தில் சமாதியாவது தவிர்க்கமுடியாததாகிவிடும். ★

# மீண்டும் யுத்தம் வெடிப்பின் தென்பகுதியிலும் பெரும் அழிவு!

## எச்சரிக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஏப்.9

மீண்டும் யுத்தம் வெடிக்கும் பட்சத்தில் தென் இலங்கையும் பல்வேறு அழிவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் (சுரேஷ் அணி) பிரமுகர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற முன்னாள் அதிபர் பரமேஸ்வரன் நம்பிக்கை நிதியத்தின் மாட்சிவிதப்பும், மனித மேம்பாட்டு உதவி வழங்கல் நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக உள்ளார்.

அதேவேளை -

நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது.

இந்த நிலைமையில் நாட்டில் நிரந்தர சமாதானம் மலர வேண்டுமானால் இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் உண்டு.

ஆனால், இந்த நிலை ஏற்படுமா? அல்லது மீண்டும் யுத்தம் வெடிக்குமா? என்பதுதான் கேள்விக்குறியாகவுள்ளது.

எனவே, யுத்தம் ஒன்று ஏற்படாமல் சமாதானத்தை முன்னெடுக்க மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் நிச்சயம் வெற்றி பெற்றே தீரும் - என்றார்.

நாடக எழுத்தாளர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை தமதுரையில் கூறியதாவது:-

அமரர் பரமேஸ்வரன் கல்வி உலகிற்கே முன் உதாரணமாக வாழ்ந்து காட்டியவர். மாணவர்களோடு மாணவனாகவும், ஆசிரியர்களோடு ஆசிரியராகவும், நண்பனோடு நண்பனாகவும் பழகும் தன்மை இவரிடம் உண்டு - என்றார்.

செங்குந்த இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற பலர் இன்று டாக்டர்களாகவும் பொறியியலாளர்களாகவும் சமூக சேவையாளர்களாகவும் உள்ளனர். இவை எல்லாவற்றிற்கும் முன்னாள் அதிபர் பரமேஸ்வரன் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது - என்றார்.

தொடர்ந்து மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (எ-180)

# புலமைப் பரிசில் குறித்த இலவசக் கருத்தரங்கு

தரம் 5 மாணவர்களின் நலன் கருதி 2003ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பற்றிய இலவசக் கல்வி கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன.

இக் கருத்தரங்கு மேல் மாகாண கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இன்று புதன்கிழமை புனித போஸ்கோ மகா வித்தியாலயத்திலும் -

நாளை வியாழக்கிழமை கொகுவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும் - முற்பகல் 8.30மணி தொடக்கம் பிற்பகல் 4.30மணிவரை நடைபெறும். இக்கருத்தரங்குகளில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ)

# சமூக அபிவிருத்தி மன்றத்தின் சுயதொழில் கடன் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

சமூக அபிவிருத்தி மன்றம், தனது அங்கத்தவர்களுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கென சுமார் 30 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கவுள்ளதாக சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீஸன் தெரிவித்தார்.

இதற்கான நிதியுதவி தேசிய நம்பிக்கை நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்றத்தின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தருகையில் திருமதி என்.ஜெகதீஸன மேலும் கூறியதாவது:

எமது மன்றம் சேமிப்புப் பழக்கத்தையும் தலைமைத்துவப் பண்பையும் வளர்த்தெடுப்பதனை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. எமது மன்றத்திலுள்ள 5ஆயிரத்து 400 அங்கத்தவர்களில் 4ஆயிரம் பேர் பெண்களாவர்.

எமது மன்றத்தினால் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒருவர் அங்கத்தவராக இணைந்து கொண்ட ஆறுமாத காலப் பகுதியினுள் சீரமமான சேமிப்பின் மூலம் அறுநூறு ரூபா சேமித்திருக்க வேண்டும். அப்போது 3ஆயிரம் ரூபா வரை அவருக்கு கடன் வழங்கப்படும். இந்த ஆரம்பக் கடனை முறையாக மீளச் செலுத்தி முடித்தால் ஆயிரம் ரூபா வரையான சேமிப்பை அடையும் போது 5ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும். இவ்வாறு 2ஆயிரம் ரூபா சேமிப்பு தொகையாயின் ரூபா 10ஆயிரமும் 3ஆயிரம் ரூபா சேமிப்பு தொகையாயின் ரூபா 15ஆயிரமும் கடனாக வழங்கப்படும். இவற்றுக்கு 1%வீத வட்டி மட்டுமே அறவிடப்படுகிறது.

இக்கடன்கள் யாவும் விவசாயம், கால்நடை வளர்ப்பு, தையல் போன்ற சுயதொழில் முயற்சிகளுக்கே வழங்கப்படுகின்றன.

இம்மன்றம் ஜி.ரி.இசற். போன்ற அமைப்புகளுடன் இணைந்து சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது - என்றார் அவர். (ஓ-9)

## நெற் கற்றைகள் விஷமிகளால் நாசம்!

இணுவில்,ஏப். 9

சூடுமிதிப்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெற்கற்றைகளை இனந் தெரியாத குழுவொன்று தீமூட்டி அழித்துள்ளது. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் அராலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வயலில் இடம்பெற்றது (ஓ-49)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்.கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கற்கைநெறிகளுக்கான சான்றிதழ்வழங்கும் வைபவம் நாளை மறுதினம் காலை 9மணியளவில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என யாழ் வலய கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-49)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P.), ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

## விற்பனைக்கு

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி திருநெல்வேலி கிழக்கு. (16440)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 10-04-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16542)

## றோணியோ இயந்திரம்

நல்ல நிலையிலுள்ள றோணியோ இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.10,2ஆவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777 274462 (16538)

## கணித வகுப்புகள்

G.C.E. O/L 2003 திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளித்து கணித்தை ஆரம்ப அறிவில் இருந்து கிழமைக்கு 10 மணித்தியாலங்கள் காலை அல்லது மாலை வகுப்புகள் நடைபெறும் பரா மாஸ்ரர், 8, பிளச்சஸ ஒழுங்கை, சுண்டுக்குளி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்). (16460)

## தவறிவிட்டது

குமரவேள் முருகவேள் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 610650252V), விசேட அடையாள அட்டை (இல.0901019813), கடற்படை அடையாள அட்டை (இல.025068) என்பன 05-04-2003 அன்று யாழ். பஸ்நிலையப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.629/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (16533)

முல்லையடி, பளையைச் சேர்ந்த சிவராஜா அஜன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.811724467V), விசேட அடையாள அட்டை (இல. 091503438) என்பன 757 இலக்க பஸ்ஸினுள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கங்கை தொலைத் தொடர்பு நிலையம் (021 226 3245) பருத்தித்துறை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (16543)

## திருமண சேவை

1972 மிருகசீரிடம், செவ்வாய் பாவமற்ற சொந்த விற்பனை நிலையம், வீடு உடைய Office Equipment Technician இற்கு, படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P. 222 5696 (16488)

# சேவைநலன் பாராட்டு விழா

## திருமதி மேரி திரேசா வசந்தகுமார்



சேவைக்காலம்:

| | |
|---|---|
| 01.09.1971 - 31.12.1972 | யா/கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் வித்தி. ஆசிரியர் |
| 01.01.1973 - 31.12.1974 | யா/ஆசிரிய கலாசாலை கோப்பாய் மனையியல் பயிற்சி |
| 01.01.1975 - 30.11.1992 | யா/புங்குடுதீவு மகா வித்தி. ஆசிரியர் |
| 01.12.1992 - 31.12.1993 | முதன்மை ஆசிரியர் மனையியல் வேலணைக் கோட்டம் |
| 01.01.1994 - 30.09.1998 | முதன்மை ஆசிரியர் மனையியல் வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம். |
| 01.10.1998 - 22.03.2003 | முதன்மை ஆசிரியர் மனையியல் தீவக வலயக் கல்வி அலுவலகம் |

23-03-2003ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகின்றார்.

தீவகக் கல்வி வலயத்தில் மனையியல் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக கடமையாற்றி 23-03-2003ஆம் திகதியிலிருந்து இளைப்பாறிச் செல்லும் திருமதி மேரி திரேசா வசந்தகுமார் அவர்கள் சகல சிறப்புக்களுடனும் பல்லாண்டு காலம் வாழப் பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்.

தீவக வலயக் கல்விப் பணிமனை வேலணை. (16551)

வலயக் கல்விப் பணிப்பாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள்.

# பாராட்டி வாழ்த்து



கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உள்ள அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பணிமனையில் 2003 பங்குனித் திங்கள் 22ஆம் நாள் இடம்பெற்ற விழாவில், கடந்த பல வருடங்களாக உதைபந்தாட்டத்தின் மேம்பாட்டிற்காக ஆற்றிவரும் தொண்டிற்காக

**கப்ரின் D.A.M. குணசிங்கம்(J.P.)**

அவர்களுக்கு சம்மேளனத்தின் அதி உயர் விருது வழங்கப்பட்டது. ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமாகிய இவர் இன்னும் பல விருதுகள் பெறவேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*

A.யூட்குமார், ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக செயலாளரும் உறுப்பினர்களும்.

(C/27235)

# விழிநீர் உகுத்து வருந்துகிறோம்!

பாரில் சேவைக்காய் 1952 - 01 - 10



படைத்தவன் தேவைக்காய் 2003 - 04 - 06

## சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(கனகசிங்கம்)

"வருவீரென விழிதிறந்து காத்திருந்தோம்
விழிகளில் நீரைத் தந்துவிட்டு..."

கனடா கழுகுகள் செயற்குழுவின் ஸ்தாபகரும் தற்போதைய ஆலோசகருமான சாங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (கனகசிங்கம்) அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு மிகுந்த மனவேதனை அடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கழுகுகள் விளையாட்டுக் கழகம்
நெற்கொழு, வல்வெட்டித்துறை.

(16547)

# அகம் நெகிழ அரனடி சேர்ந்த உங்களுக்கு அஞ்சலிகள்

## ஏழாவது ஆண்டு (09-04-2003 திதி)



**அமரர் முருகேசு பாலசிங்கம்**

இவ்வுலகில் - இறையுலகில்
1942-06-09 1996-03-25
(7ஆவது ஆண்டு)



**அமரர் முருகேசு குணநாயகம் (M.G.M.)**

இவ்வுலகில் - இறையுலகில்
1944.10.15 2002.11.18
(143ஆவது நாள்)

அண்ணனென தம்பியென அவனி போற்றிட வாழ்ந்தீர்கள்
அகத்தினை நெகிழவைத்து அரனடிக்கு சென்றீர்கள்
எண்ணரிய பண்பினால் எல்லோரையும் அரவணைத்து வாழ்ந்தீர்கள்
எங்களைப் பிரியாது என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.
மகன் - கவிமாமணி, மதுரகவி, காரை.எம்.பி. அருளானந்தன்.

*சந்தம்புளியடி, காரைநகர்* (சி-27232)

# அறிவித்தல்

பல வருடங்களாகப் பதியப்பட்டுள்ள உறுதிகள், உறுதிச் சொந்தக்காரர்களால் பெற்றுக்கொள்ளப்படாமல் என்னிடம் உள்ளன. உறுதிச் சொந்தக்காரர்கள் என்னிடம் உள்ள தங்கள் உறுதிகளை 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் எனது இல்லத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

செ.புண்ணியமூர்த்தி
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்.

*மே/பா பொன்மலர் ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு றோட், அளவெட்டி.* (16544)

## மானிப்பாயில் நிலவு. Com இன்

# கணனிக் கண்காட்சியும் விற்பனையும்

காலம் : இன்று (09.04.2003) முதல் 15.04.2003 வரை
இடம் : மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அண்மையில்

அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு:

P IV கணனி இலவசம்

அனுமதி இலவசம்

(27223)



RG

HERO HONDA World No.1 Two-Wheeler Company

63, 65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/27237)

# மரண அறிவித்தல்கள்

## சீவரத்தினம் கனகசபாபதி

*(கடை அண்ணை)*

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் கனகசபாபதி 6.4.2003 காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கொக்குவில் கிழக்கு ப.சி.சீவரத்தினம்- இராசம்மாவின் மகனும் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் மேற்கு சரவணமுத்து - செல்லம்மாவின் மருமகனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி (பொன்குட்டி), பாக்கியம் (ஆச்சி), இரத்தினசபாபதி (Supt.of Audit) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் லலிதா, ரவிக்குமார் (கனடா), வசந்தா, விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் தகப்பனாரும் பாக்கியராசா (இளைப்பாறிய உதவி சுங்க அத்தியட்சகர்), யசோதரா (கனடா), பூபாலசிங்கம் (கணக்காளர்), சசிகலா (லண்டன்), ஜெயரூபி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் உதயபாலன் (ஆஸ்திரேலியா), யூடி (ஆஸ்திரேலியா), சர்மிளா (ஆஸ்திரேலியா), பிரார்த்தனா (கனடா), தேன்மொழி, அகிலன் (கனடா), பவித்திரா (லண்டன்), தர்சனா (லண்டன்), ஆரத்தியா (லண்டன்), யதானா (சுவிஸ்), ஜதீன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ரிறோனின் (ஆஸ்திரேலியா) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9.4.2003 புதன்கிழமை 18, றோகினி றோட், வெள்ளவத்தையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அவரின் பூதவுடல் 3 மணியளவில் பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 4 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

*18, Rohini Road,*
*Wellawatte, Colombo -6*
*Tel. 590814*

(சி-27224)

## வாரித்தம்பி வள்ளிப்பிள்ளை

கெற்பெலியைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாரித்தம்பி வள்ளிப்பிள்ளை 07-04-2003 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கதிராசிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரியும் வாரித்தம்பியின் அன்பு மனைவியும் வசந்தகோகிலம், மல்லிகாதேவி, சறோஜாதேவி, கமலேஸ்வரி (ஆசிரியை யா/கொடிகாமம் அ.த.க.பா.) ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்தம்பி, உருத்திரமூர்த்தி, பாலசுப்பிரமணியம் (பிரதேச சபை சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் மதீஸ்வரன் (சாந்திகம்), மதிவதனி (ஆசிரியை), றஞ்சனா, மதியழகன், திருமதி றவிதா, ஜெயராசா (இத்தாலி), மைதிலி, பார்த்தீபா, மகிந்தன், யாழினி, நிதேனுகன், நிதர்சன், ஜீவன்யா, அபிராமி, ஐங்கரன், செந்தூரன் ஆகியோரின் அன்புக் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08-04-2003) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவித்தாழ் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வா.கமலேஸ்வரி (மகள்)
சி.மதீஸ்வரன் (பேரன்)

*கச்சாய் வீதி, கொடிகாமம்.* (16545)

# தலைவரைக் குறிவைத்தே வன்னிக்குள் ஊடுருவித் தாக்கும் அணி புகுந்தது!

## ஜெனீவாப் பேரணியில் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

**சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் கோரிக்கைப் பேரணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை இது.**

இரண்டு வாரங்களுக்கு முன் - உங்களுக்குத் தெரியும் - நான் கிளிநொச்சியில் நின்றிருந்தேன். அங்கு பயங்கர வெயில் பங்குனி வெயில், அது தாங்கமுடியாமல் இங்கே வந்தால் இங்கே பயங்கரக் குளிர். எங்க போனாலும் சனியன் விடமாட்டாது போலத்தான் இருக்கின்றது.

சமீபத்தில் பத்திரிகைகளில் அறிக்கை ஒன்று வந்தது. அதில் பாலசிங்கம் தம்பதியர் கிளிநொச்சியில் நிற்கும்போது சிங்கள இராணுவம் ஆழ ஊடுருவித் தாக்குதலுக்காக ஓர் ஆயுதக் குழுவை வன்னிக் காட்டுக்குள் - கிளிநொச்சிக் காட்டுக்குள் - அனுப்பியதாகச் செய்திகள் வந்திருந்தன.

அந்தச் செய்திகள் உண்மைதான். ஆனால், இந்த ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்த முனைந்தது பாலசிங்கத்தைக் கொல்வதற்கல்ல. எமது தலைவர் பிரபாகரன் அவர்களை இலக்குவைத்துத்தான் இந்தக்குழு அனுப்பப்பட்டது.

நான் கிளிநொச்சியில் நிற்கும் சமயத்தில் அநேகமாகத் தலைவர் அவர்கள் வெளியே வந்து இராஜ தந்திரிகளையும் மற்றும் பிரமுகர்களையும் சந்திப்பது வழக்கம். ஆகவே, தலைவர் அவர்கள் வெளியே வருவார். அவரைக்குறி வைத்து இந்தத் தாக்குதல நடத்துவதற்காகத்தான் இந்த ஆழ ஊடுருவித் தாக்கும் குழு அனுப்பப்பட்டது.

ஆனால், நாங்கள் எங்களுடைய படையணிகளை, பல்லாயிரக்கணக்கான எமது புலிவீரர்களைக் காட்டுப் பிரதேசத்துக்கு அனுப்பி சல்லடைபோட்டுத் தேடி இந்தக் குழுவைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தோம். நாங்கள் உஷார் அடைந்ததைக் கண்ட சிறிலங்கா ஆயுதக்குழு அங்கிருந்து இரவிரவாக நழுவிவிட்டதாகப் பின்னர் அறிந்தோம்.

ஆகவே, ஒருபுறம் சமாதானப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. மறுபுறம் எமது தலைமையைக் குறிவைத்து இராணுவத்தில் உள்ள சில பிரிவுகள் செயற்படுவதாக எமக்கு ஆழமான சந்தேகம் இருக்கிறது. ஆகவே, நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்கின்றோம்.

### என்னைவேண்டுமானால் போட்டுத் தள்ளுங்கள்!

என்னைப் பொறுத்தவரை, என்னை எபபோது, யாராவது வந்து 'போட்டுத் தள்ளுவாங்கள்' என்று எதிர்பார்த்துக் கொண்டுதான் திரிகிறேன். ஏனெனில், எனக்கு வயதும் போய்விட்டது. வருத்தமும் கூட. மாரடைப்பு வந்து நான் இறந்தால் பாலசிங்கம் அகால மரணமானார் என்று சொல்லிவிட்டு என்னை மறந்துவிடுவார்கள். ஆனால், நான் வன்னியில் நிற்கும்போது சிங்களவன் வந்து என்னைப்போட்டுத் தள்ளிவிட்டால் பாலசிங்கம் களத்தில் மடிந்த மாவீரன். என்ற பெயர் வரும். ஆகவே யாராவது வந்து என்னைப் போட்டுத்தள்ளமாட்டார்களோ என்று நானே தேடித் திரிகிறேன்.

பேச்சுக்கள் பற்றியும், இன்றைய நிலைமை பற்றியும் இந்தப் பேச்சுகள் எந்த நிலையில் செல்கின்றன என்பது பற்றியும், அந்தப பேச்சுமூலம் எமது மக்களுக்கு விடிவுவருமா? எமது பிரச்சினைக்கு ஒரு தீர்வு வருமா என்பதைப் பற்றியும் உங்களுக்கு இங்கு எடுத்து விளக்க முயற்சிக்கின்றேன்.

இப்பொழுதும் இராணுவ ரீதியான பிரச்சினையே உள்ளது. ஏனென்று சொன்னால் நாங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அமைதியைப பேணி வருகின்றோம். எத்தனையோ ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியிலும் பொறுமையை இழக்காது, நிதானத்தை இழக்காது - அமைதியைப் பேணி வருகிறோம்.

### யாழ்ப்பாணத்தில் நிலைமை

ஆனாலும், தமிழீழத் தேசத்தில் குறிப்பாக, வடக்கு - கிழக்கில் யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை இன்னும் தோன்றவில்லை. அங்கு மூலைக்கு மூலை இராணுவம். நாற்பதினாயிரம் படைகள் ஒரு சிறிய பூகோளப் பிரதேசத்தை ஆக்கிரமித்து நிற்கின்றன.

எமது போர்நிறுத்த உடன்பாட்டின் வதிகளின்படி இந்த இராணுவம் எமது பாடசாலைகள், கல்லூரிகள், கோவில்கள் வீடுகள், குடியிருப்புக்கள் இவற்றில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

இந்த ஆறுமாதமாக நாங்கள் பேசியும் இராணுவம் தனது இலக்குகளை விட்டு விலகுவதற்கு தயங்கிக் கொண்டிருக்கிறது. அதாவது தங்களது நிலையிலிருந்து விலகி, இந்த மக்களை திரும்பி அவர்களது வீட்டுக்குச் செல்வதற்கு முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது.

இப்பொழுது சொல்கின்றார்கள் இராணுவம் நிலைகொண்டிருக்கின்ற கேந்திர முக்கியம்வாய்ந்த இடங்களைச் சுட்டிக்காட்டி இவையெல்லாம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று.

வலிகாமம் வடக்கில் இருந்து இராணுவத்தை விலகும்படி கேட்டால அதியுயர் பாதுகாப்பு வலயம். அதிலிருந்து விலகினால் எங்களுக்கு ஆபத்து என்று கூறி இறுக்கிப்பிடித்து வைத்திருக்கிறார்கள்.

சரி, தாங்கள் அப்படித்தான் விலகுவது என்று சொன்னால் விடுதலைப் புலிகளிடம் இருக்கின்ற கனரக ஆயுதங்கள், பீரங்கிகளை அவர்கள் கையளித்தால் தாங்கள் இந்த இராணுப் பரதேசத்தில் இருந்து விலகுகின்றோம் என்று சொன்னார்கள். நாங்கள் அதை உடனடியாக நிராகரித்துவிட்டோம்.

ஏனென்றால், மக்களை குடியமர்த்துவது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை.

அகதிகள் - இடம்பெயர்ந்தவர்கள தங்களது குடியிருப்புகளுக்கு திரும்புவது ஒரு தவிர்க்கமுடியாத மனித உரிமை. அவர்களைத் தடுப்பது மனித உரிமையை மீறும் செயல் என்று ஐநா. சாசனத்தில் தெளிவாகச் சொல்லப்படுகிறது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் உள்ள பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை விலக்குமாறு கோரினோம். அதன் பின்பு உயர் பாதுகாப்பு வலயங்களைப் பற்றி பேசலாம் என்று கேட்டுக்கொண்டோம். அதன்படி அவர்கள் தாங்கள் அதற்கு முயற்சிப்பதாகக் கூறினார்கள்.

ஆனால், இருவாரங்களுக்கு முன்னர் ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். யாழ்ப்பாண நகரத்தின் மையத்தில் ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்களை பிரிகேட் தலைமையகமாகப் பாவிக்கின்றார்கள். இதனுடன் அண்டிய 80 வீடுகளையும் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். இது யாழ்ப்பாணத்தின் மையப்பகுதி. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அருகில் இரண்டு, மூன்று வீதிகளையும் அடைத்து எல்லா வீடுகளையும், ஹோட்டல்களையும் எடுத்து அதில் இராணுவம் குந்திக்கொண்டு இருக்கிறது.

நீங்கள் சொன்னோம், யாழ்ப்பாண மையத்தில் இருந்து இவர்களை அகற்றுமாறு. அப்போது அகற்றுவதற்கு மாற்றுத் திட்டத்தைத் தந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி யாழ்ப்பாண பழைய மாநகரசபை வெளி, கோட்டை முனியப்பர் கோவிலடி, மத்திய கல்லூரிக்கு முன்னால் உள்ள வெளிகள், பழைய மாநகரசபை, இவற்றை அடக்கி ஒரு பெரிய பிரதேசத்தை எடுத்து அதில் ஒரு பெரிய இராணுவத் தளத்தை அமைப்பதற்கான ஒரு திட்டம். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி ஓர் இராணுவத் தளத்தை பழைய யாழ்ப்பாண மையத்தில் நிறுவினால் தாங்கள் இதிலிருந்து வெளியேறுவோம் என்று சொன்னார்கள். நாங்கள் அதை மறுத்துவிட்டோம். ஏனென்று சொன்னால் இது ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்தப்படுகின்ற ஆக்கிரமிப்பே. இராணுவ விலகல் அல்ல. இராணுவம் எமது கலாசார மையமான யாழ்ப்பாண தலைநகரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அதிலிருந்து விலகுவதற்கு எவ்வளவு தடைகளைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள் இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுவதற்கான நோக்கம் ஒன்றும் இல்லை.

ஆகவே, எங்களைப் பொறுத்தவரை இந்த இராணுவத்துக்கு ஆக்கிரமிப்பைக் கைவிட்டு, எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிப் போக அவர்களுக்கு விருப்பமில்லை என்பது இப்போது தெட்டத் தெளிவாகின்றது.

இந்த இராணுவ ஆக்கிரமிப்பையே வலக்க விரும்பாத இந்த அரசாங்கம், தமிழர்களுக்கு பூரண சுயாட்சியுடைய



ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொடுக்குமா? என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாக இப்பொழுது எழுந்திருக்கிறது.

### தொடர்ந்து பேசுவது ஏன்?

என்றாலும் நாங்கள் பேசுகின்றோம். ஏனென்றால் உலகத்திற்காக. உலகம் எதிர்பார்க்கின்றது புலிகள் உண்மையாக, நேர்மையாக இந்தப் பேச்சுக்களில் பங்குகொள்கிறார்களா? சிங்கள அரசா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளா இந்தப் பேச்சுக்களில் உண்மையாக நம்பிக்கை கொண்டு செயற்படுகிறார்கள் என்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் நேர்மையாக, நிதானமாக, உண்மையாக இந்தப் பேச்சுக்களில் பங்கு கொள்கின்றோம். சிங்களவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு இடையூறுகளை விளைவிக்கின்றார்கள் என்பதை உலகத்துக்கு உதாரணமாக எடுத்துக்காட்டும் நோக்குடன்தான் இந்தச் பேச்சுக்களை நடத்திவருகின்றோம்.

அடுத்தது கடல் பிரச்சினை. கடலில் பல சம்பவங்கள் நடக்கின்றன. எங்களுடைய மீன்பிடிப் படகு ஒன்றைக் கட்டி இழுத்துக்கொண்டு போக முயற்சித்தபொழுது எமது போராளிகள் அந்தப் படகுக்கு தீவைத்து நெடுந்தீவுக் கடலில் தற்கொலை புரிந்த சம்பவம், பின்னர் முல்லைத் தீவில் இருந்து 220 கடல்மைல்களுக்கு அப்பால் அதாவது சர்வதேசக் கடற்பரப்பில் எமது எண்ணெய்த்தாங்கிக் கப்பல் ஒன்று தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம்.

அதாவது, ஸ்ரீலங்கா கடற்படைக்கு சம்பந்தமில்லாத - ஒரு சர்வதேச கடற்பரப்பில் - நான் கிளிநொச்சியில் நிற்கும்போது இது நடந்தது.

அப்போது பிரபாகரன் மிகவும் ஆத்திரப்பட்டார். அங்கு போராளிகள் மிகவும் ஆவேசப்பட்டார்கள். எப்படியாவது இதற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று - அப்பொழுது நான் தலைவருடன் கதைத்தேன்.

பொறுமையை இழக்கவேண்டாம் இது வேண்டுமென்று செய்கிறார்கள் - அதாவது, எங்களுக்கு ஆத்திர மூட்டி ஓர் எதிர்த்தாக்குதலை நடத்தி, பின்னர் புலிகள் போர்நிறுத்தத்தைக் குழப்பிவிட்டார்கள்; பேச்சுக்களைக் குழப்பிவிட்டார்கள் என்று எங்கள் மீது பழி சுமத்துவதற்காகத் திட்டமிட்டு கடற்படை இதைச் செய்கின்றது என்று சொல்லி ஓரளவு பிரபாகரனைச் சாந்தப்படுத்தி பதில் நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் செய்து, பின்னர் ஜப்பானில் நடந்த பேச்சுக்குப் போனோம்.

இதில் 11போராளிகள், அதுவும் எங்களுக்கு மிகவும் வேண்டிய கடற்புலிகளைச் சேர்ந்த மூத்தளபதிகள் அவர்கள். அவர்களின் இழப்பு எங்களுக்கும் பெரிய இழப்பு. கப்பலும் அதிக விலைகொண்ட கப்பல்.

ஆகவே, இந்தக் கப்பல் அழிக்கப்பட்டதும் எங்களுக்குப் பெரிய நஷ்டம்; ஓர் ஆத்திரமூட்டும் செயல். அப்படியிருந்தும் பொறுமை இழக்காமல் அங்கு யுத்தத்தைத் தடுத்து, சமாதானத்தை நிலைநாட்டி இந்தப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்ற ரீதியில் நாங்கள் எதிர் நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொண்டோம்.

கடலில் பின்னர் ஒரு சீனப் படகு ஒன்று தாக்கப்பட்டது. இதை யார் செய்தார்களோ எங்களுக்குத் தெரியாது. ஆனால், என்ன உண்மை என்று சொன்னால் எமது தமிழீழக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா சிங்களக் கடற்படையும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளும் மட்டுமல்ல. அங்கு பலர் நடமாடுகின்றார்கள்.

இந்தியக்கப்பல்கள் எமது கடலோரமாக வந்து எங்களுடைய மீனவர்களின் வலையை வெட்டி, மீனவர்களின படகுகளைத் தாக்கி அழித்து வருகின்றன. மன்னார் கடலோரமாக இது நிகழ்ந்து வருகின்றது. நாங்கள் பல தடவை இந்த இந்திய மீன்பிடிப் படகுகளைப் பிடித்து மீனவர்களைப் பிடித்து வெருட்டிவிட்டிருக்கின்றோம்.

இப்போது சீனக்காரரும் வரத் தொடங்கி விட்டனர். அப்ப எல்லோரும் வந்து போகின்றார்கள். எங்களுடைய கடலில் சீனா வந்து, இந்தியா வந்து மீன்பிடிக்கலாம். இறால் பிடிக்கலாம். ஆனால், தமிழன் மாத்திரம் பிடிக்க முடியாது. தமிழனுக்குத்தான் கட்டுப்பாடு.

### கடற் குழப்பங்களுக்கு மூலகாரணம் யார்?

மீன்பிடித்தடைகள் இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் எங்களுடைய கடலில் சுதந்திரமாக நடமாடமுடியாது. இப்படியாக எங்களுடைய கடற்பரப்பில் அநியாயம் நடக்கின்றது.

இதற்கு மூலகாரணம் யார் என்று பார்த்தால் அங்கு கடற்படைத் தளபதி ஒருவர் இருக்கின்றார். அவர் அம்மாவின் ஆள். அவருடைய பதவி 3வருடம் கூட்டப்பட்டிருக்கின்றது.

'பிரச்சினையை ஏற்படுத்தி சண்டையைத் தொடக்கு!' என்று அம்மா ஆணை கொடுத்திருக்கின்றார் போல இருக்கின்றது. அதுதான் கடலில் பிரச்சினையாக இருக்கின்றது.

கண்காணிப்புக்குழு புலிகளையும் கடற்படையையும் சேர்த்து ஒரு மாநாட்டைக் கூட்டி, வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் பிரச்சினை இல்லாத மாதிரி ஒரு செயற்றிட்டத்தை உருவாக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

### ஆறுசுற்றுப் பேச்சுக்களில் சாதித்தவைதான் என்ன?

பேச்சுக்கள் நடைபெறுகின்றன. அறிந்திருப்பீர்கள். ஆனால், இந்த ஆறுசுற்றுப் பேச்சுக்களிலும் என்ன சாதித்தீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

எங்களைப் பொறுத்தவரை, இநத யுத்தநிறுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கில் அமைதி நிலவுகிறது. அது உண்மை. 10,15 வருடங்களுககு மேலாகத் தடைசெய்யப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்கள் மட்டக்களப்புக்கும் வன்னிக்கும் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் துண்டிக்கப்பட்டிருநத வன்னிக்கு தற்போது போக்குவரத்துகள் நடைபெறுகின்றன. முக்கியமான சில பாதைகள் திறக்கப்பட்டுவிட்டன. யாழ். - கண்டி வீதி மற்றும் முக்கிய வீதிகள் திறக்கப்பட்டதால் சனப் போக்குவரத்து நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தினமும் வன்னியூடாகப் பயணம் செய்கின்றனர். இதனால், வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வர்த்தக, பொருளாதார முயற்சிகள் புதுமெருகடைந்துள்ளன.

அதேபோல, யாழ்ப்பாணத்திலும் வர்த்தக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமது தாயக பூமிக்குச் சென்று சொந்தக் கிராமங்களின் நிலைமையைக் கண்டு வரக்கூடியதாக உள்ளது. இப்படியான ஆக்கபூர்வ அம்சங்களும் அங்கு நடைபெறுகின்றன. மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். வீடுகளைக் கட்டி, காணிகளைத் திருத்தி, பொருளாதார முயற்சிகளில் மக்கள் ஈடுபடுகிறார்கள்.

ஆனால், அதேவேளை இராணுவம் எமது மண்ணைத் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பதால் பல லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத ஒருநிலை அங்கு உண்டு. இந்த இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்ந்து நீடிக்கும்வரை அங்கு அமைதி ஏற்பட்டாலும் இயல்புநிலை தோன்றவில்லை.

பேச்சுக்கள் மூலம் நாம் அரசியல் ரீதியான பல விடயங்களைப் பேசுகின்றோம். தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் தமிழர் தாயகத்தில் தம்மைத்தாமே ஆளக்கூடிய, பிரதேச சுயாட்சியுடைய ஒரு சமஷ்டி அரசுத் தீர்வுத் திட்டத்தை நீங்கள் தந்தால் அதைப் பரிசீலிக்கத் தயார் என்று நாம் பேச்சுக்களில் இலங்கை அரசிடம் கூறியிருக்கிறோம்.

நாம் சமஷ்டித் தீர்வை ஏன் கேட்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும். ஏனெனில், பேச்சு என்று போய் அங்கு - பேச்சு மேசையில் - தமிழீழம்தான் வேண்டும் என்று கேட்டால் அங்கு பேச்சு நடக்காது.

ஆகவே, மாற்று யோசனை ஒன்றை முனவைத்துள்ளோம். அதாவது, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒத்துக்கொண்டு - தமிழ் மக்களின் தேசிய அந்தஸ்தை ஏற்றுக்கொண்டு - ஒரு சுயாட்சி முறையைத் தாருங்கள். அது சமஷ்டி வடிவமாகவும் இருக்கலாம் அல்லது கூட்டாட்சி வடிவமாகவும் இருக்கலாம். அப்படியான ஆட்சி அமைப்பு முறைகளை நாம் முதலில் பரிசீலித்துப் பார்ப்போம் என்ற திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

21பேர் கொண்ட அரசியல் விவகாரக் குழு ஒன்றை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதில் 16பேர் புலிகளின் அரசியல் பிரிவில் நீண்டகாலமாகச் செயற்பட்ட போராளிகள். எமது அமைப்புக்கு அரசியல் ரீதியாக வேலைசெய்த வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் ஐவர். இவர்கள் கனடா, பிரிட்டன், சுவிஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த அரசியல் விவகாரக் குழு நோர்டிக், ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கு முதற்கட்டமாக விஜயம் செய்துள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் இந்தக் குழு, சுவிட்ஸர்லாந்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள அரசமைப்புமுறைகள், சமஷ்டி ஆட்சி முறைகள், கூட்டாட்சி முறைகள் என்பவற்றைப் படித்து, அதன்பின்னர் எமது மக்களுக்கு ஏற்ற ஓர் அரசியல் வடிவத்தை அமைப்போம் என்று தெரிவித்துள்ளோம்.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை இந்த சமஷ்டி ஆட்சிமுறை, சுயாட்சிமுறை - எமது தாயகத்தில் எமக்கொரு சுயாட்சி வேண்டுமென்ற அரசியல் கோரிக்கை - நீண்டகாலமாக - 50 வருடங்களுக்கு முன்னரே - எமது தலைவர்களால் பிரேரிக்கப்பட்ட ஒன்று. இது புதியதல்ல. செல்வநாயகம் சமஷ்டிக் கட்சி என்றே ஓர் அமைப்பைத் தோற்றுவித்த வரலாறு உங்களுக்குத் தெரியும். அந்த நேரத்தில் சிங்களவர்கள் அந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இப்பொழுது, இந்த அரசு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுயாட்சி முறையைப் பரிசீலிக்கத் தயார் என்று கூறியிருக்கிறது. அதுவே பெரிய காரியம். அவ்வாறு ஒப்புக்கொண்டதற்குக் காரணம் எமது நீண்ட போராட்ட வரலாறே.

இரத்தம் சிந்திப் போராடி, எத்தனையோ அற்புதமான சாதனைகளைப் படைத்து, எத்தனையோ அர்ப்பணிப்புக்களைச் செய்து, பெரிய ஒரு போராட்ட வரலாற்றை உருவாக்கி, எமது பிரதேசத்தின் முக்கால்வாசிப் பகுதியை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்புதான் எமது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஒன்றுபட்ட சக்தியாக விடுதலைப் புலிகளின் பின்னால் நின்று, எமக்கு இந்தச் சமாதான முயற்சியில் முழு ஆதரவைத் தந்து, ஒரு சமாதான சூழ்நிலை அவசியம், சமாதான வழியில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற உறுதியை வழங்கியுள்ளார்கள்.

(10.ஆம் பக்கம் பார்க்க)


இதோ இன்று முதல் யாழ்
மக்களுக்கு சன்குவிக் பழரசம்
பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப
தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.
sunquick
sunquick
அதிக பழங்கள் அதிக கோப்பைகள்